மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 6 சுற்றம் : 10 / அக்டோபர் 2018 / ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி / விலை : ரூ.10/-





## பனை விதை நடுவோம்!



## தமிழ்த் தாத்தா தாமோதரன்பிள்ளை

## விடுதலைப் புலிகள் முகமதியர்களுக்கு எதிரானவர்கள் அல்ல!






பத்திரிகையாளர் திரு. இருதயராஜ் குடும்ப விழாவில் செந்தமிழ்நாடு ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் திரு. விசவனூர். வே. தளபதி அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினார்.

இராமன் அரங்கில் நடைபெற்ற கவிதைச் சிறகுகள் நிகழ்விற்கு தலைமையேற்ற படைப்பாளர் நீரை அத்திப்பூ (அப்துல் லத்தீப்) அவர்களிடம் முற்றம் இதழை துணைஆசிரியர் திருமதி. உமாமகேசுவரி தந்தபோது...

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly October 2018

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**அலெக்சாண்டர்**

வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**
அலுவலக முகவரி
எண் 124, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை- 600 024
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

அழிவு அரசியல் (தலையங்கம்) ....4

இந்திய ஆட்சி மொழிகளுள் ஒன்றாக தமிழும் இடம் பெறவேண்டும்
மாநிலங்களவையில் அண்ணா பேச்சு ....6

பெருந்தலைவர் காமராசர்
– அ. இறையனார் ....7

தமிழை வைத்து நான் பணம் சம்பாதிக்கவில்லை
–பீமபெருமாள் ....10

குப்பை சேகரிக்கும் ரோபோவை கண்டுபிடித்த பள்ளி மாணவர்.... 11

மண் பாத்திரத்தில் சமைத்துண்பதே சாலச் சிறந்தது
பீமபெருமாள்.... 13

நிலத்தை ஆக்கிரமித்த சாஸ்த்ரா பல்கலைக்கழகம்.... 14

புலிகள் முகமதியர்களுக்கு எதிரானவர்கள் அல்ல
– தமிழ் இராஜேந்திரன்.... 15

சீரழிந்த சென்னை சாலைகள்
– சைதை மணிமாறன்.... 18

தீர்ப்பு
– தங்க. மாணவன்.... 19

ஆங்கிலேயர் ஆட்சி மீண்டும் வந்தால் மனப்பூர்வமாக வரவேற்பேன்
– மகாத்மா காந்தியின் செயலாளர் கல்யாணம்.... 20

கிருஷ்ணவேல் அவர்கள் நூல் வெளியீட்டு விழாவில்
திரு. சுபவீ அவர்கள் ஆற்றிய உரை.... 21

பனையின் பயன்கள்.... 30

சட்டமன்ற உறுப்பினர் கருணாஸ் கைது ஏன்?
வேர்மகள்.... 31

திரு உ. சகாயம் அவர்களின் மாபெறும்
தமிழ் கையெழுத்து திருவிழா ....32

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



வாழ்கதமிழ்!

# அழிவு அரசியல்?

ஒவ்வொரு நாளும் ஒரு பரபரப்புச் செய்தி, பத்து நாட்களுக்கு முன் நடந்த மோசமான நிகழ்வுகளுக்கு மக்கள் எதிர்வினை ஆற்றுவதற்கு முன்பதாகவே, பல சரியற்ற நிகழ்வுகள் தமிழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாகவே நடந்து வருவதை மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

நடுவண் அரசில் இருக்கிற கட்சியின் தலைவர் சொல்கிறார், ‘எதையாவது சொல்லி சிக்கலை ஏற்படுத்துங்கள்’ என்று. இவருக்கு முன் இருந்த அக்கட்சியின் தலைவர் சொல்கிறார், ‘நாங்கள் ஆட்சிக்கு வருவோம் என்று நம்பிக்கையில்லாமல்தான் பல வாக்குறுதிகளை எங்களது நோக்கத்திற்குச் சொன்னோம். எதிர்பாராத விதமாக ஆட்சிக்கு வந்துவிட்டோம். சொன்னதைச் செய்ய இயலாது’ என்கிறார்.

ஒரு நடுவண் அமைச்சர் சொல்கிறார் ‘நாங்கள் அரசியல் செய்ய வந்தோம், சேவை செய்ய வரவில்லை’ என்று. சேவைதான் அரசியல் என்ற உண்மை தெரிந்திருந்தும் இப்படிச் சொல்கிறார் என்றால், இவர்களிடம் மக்கள் சேவையை எப்படி எதிர் பார்ப்பது. மக்களுக்கு சேவை செய்வோம் என்ற உறுதி மொழியோடு வந்தவர்கள் இப்படிப் பேசுகிறார்கள் என்றால், இவர்கள் ஆட்சியில் இருப்பது இந்திய நாட்டிற்கே கேடு என்பதை மக்கள் உணரத் தொடங்கியிருக்கிறார்கள்.

மக்களைப் பாதிக்கும் திட்டங்கள் வேண்டாம் என்று மக்கள் போராடுகிறார்கள். போராடும் தன் குடிமக்களையே சுட்டுத் தள்ளுகிறது அரசு. சில கைக்கூலிகளுக்கு காசு கொடுத்து, ஸ்டெர்லைட் வேண்டும் என்று பேச வைக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, ஸ்டெர்லைட் நடத்தும் வேதாந்தா நிறுவனத்திற்கு, மக்களைப் பாதிக்கக்கூடிய, தமிழக இயற்கை வளங்களை பாதிக்கிற திட்டங்களைக் கொடுக்கிறது நடுவண் அரசு. அதற்கு முழு ஒத்துழைப் பைக் கொடுக்கிறது மாநில கையாலாகாத அரசு.

இவை எல்லாவற்றையும்விட ஒரு மிகப்பெரிய கொடுமை என்னவென்றால், நடுவண் அரசு கொண்டு வரும் திட்டங்களுக்கு மக்களின் கருத்துக்கேட்பு தேவையில்லை என்று மாநில அரசு சொல்வதுதான். இப்படிப்பட்ட அரசு எப்படி மக்கள் நலன் பேணும் அரசாக இருக்க முடியும். ஒவ்வொருவரும் சிந்தனை செய்ய வேண்டிய ஒன்றாக இது இருக்கிறது.



இப்போது இருக்கிற அரசியல்வாதிகள், பணம் சேர்க்க வேண்டும். அந்தப் பணத்தை பல்வேறு நாடுகளில் பாதுகாப்பாக பதுக்கி வைக்க வேண்டும். அந்தப் பணங்கள் தத்தமது பிள்ளைகளுக்கு, வாரிசுகளுக்கு பயன்பட வேண்டும் என்ற ஒரே தேசத்துரோகச் செயல்களைத்தான் செய்து வருகின்றனர். மண் மலடாகிப் போய்விட்டால் எங்கே வாழ்வார்கள்? சந்திரனிலும் செவ்வாயிலும் வாழப் போய்விடுவார்கள். அங்கேயும் அவர்கள் இப்படித்தான் இருப்பார்கள். மொத்தத்தில் அறிவு இழந்தவர்களாய் இயற்கை அன்னையை அழித்துவிட்டு, இருக்கிற மக்களையும் வாழவிடாமல், அவர்களும் வாழாமல், எதிர்வரும் சந்ததிகள் பிறக்கா திருப்பதற்கும் இவர்கள் துணை போகிறார்கள். இந்தப் பின்னணி தெரிந்து, நாட்டைக் கொள்ளையடிக்கிறார்களா? அல்லது அறியாமல் செய்கிறார்களா என்பதே தெரியா நிலையில் மக்கள் தவிக்கின்றனர்.

அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டினால், செய்தி வெளியிட்டால் சிறைக்கு அனுப்ப அரசு துடிக்கிறது. அந்தத் தவறுகள் தவறுகள் தானா, அல்லது புனையப் பட்டதா என்பதை மக்களுக்கு வெளிப்படுத்தும் நிலையில் இருக்கும் அரசுகள், பேசவே கூடாது என்று வாய்ப்பூட்டுச் சட்டம் போடுவது மக்களாட்சியை மண்ணுக்குள் புதைக்கும் செயலாகும். ஆளுகின்ற அரசுகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவை என்பதை உணர்ந்து செயல்பட்டால் நாடு நன்றாக இருக்கும். இல்லையேல் நாட்டை ஆள்கிறவர்களுக்கு அழிவாகவே இருக்கும். நாட்டை நல்லவர்கள் காப்பார்கள்.

# கவிதை வெளி

## வழுக்கை

சோலையப்பனை
பாலைவனமென்றார்கள்
தலை வழுக்கை

தொப்பை

முதலாளிக்கு குறையணும்
தொழிலாளிக்கு கூடணும்
தொப்பை

காத்திருக்கு

வேண்டுதல் நிறைவேற்றி
கிடாவுக்கு காத்திருக்குது கருப்புசாமி

தீபாவளி

சலூனுக்கும் கசாப்புக்கும்
ஞாயிறுதோறும்
தீபாவளி

எழுத்தாளன்

முன்கோப எழுத்தாளன்
எழுதிய கட்டுரை
மனசே ரிலாக்ஸ்

**இளந்தேவன்**
9345551241.

## புதிதாய்ப் பிறப்போம் மாற்றம் பெற!

இங்கு இருக்கும் கட்சிகளே ஏராளம்
தேசியக் கட்சி வந்து என்ன செய்து விடப் போகுது
தாராளம்?

வளம் கொழித்த தமிழ்நாடு
வலுவிழந்து நிக்குது இன்று
கொள்ளை போகுது ஏராளமான வளங்கள்
அடுத்தவரிடம் ஏந்திப்பிழைக்கும் நிலையும் வந்தது
இனி என்ன நடக்குமோ என மனம் அஞ்சி நடுங்குது
ஐம்பது ஆண்டுகளாய் ஆண்டவர்களும் சரியில்லை
அனுமானத்தின் அடிப்படையில் ஓட்டுப்போடலாமா?
பிறகு அவர்களால் அவதிப்படலாமா?

அதிகாரம் கொடுத்தவனே அச்சப்படுகிறான்
மக்கள் அதிகாரம் எப்போது நாட்டில் வருமோ
அப்போதுதான் நாட்டில் மாற்றம் ஏற்படும்
பணத்தையோ அனுமானத்தையோ வைத்து
வாக்களித்தால் நாடே புதைந்து போகும்.

புதியதை விரும்பு புதியதைத் தேர்ந்தெடு
புதிய மாற்றத்தைப் பெற்றிடு!

**வாணியம்பாடி தியாகராஜன்.**

இந்திய ஆட்சி மொழிகளுள் ஒன்றாக தமிழும் இடம்பெற வேண்டும் என்று அறிஞர் அண்ணா மாநிலங்கள் அவையில் 4 3 1965 அன்று பேசியுள்ளார்.

மாநிலங்கள் அவையின் நடவடிக்கைக் குறிப்பில் அறிஞர் அண்ணா பேசியது பதிவாகியுள்ளது:

“I can never forget that I have got a hoary language in which any forefathers spoke, in which my poets have given sermons and scriptures, in which we have got classics and literature of inexhaustible knowledge/ I will nerver be content till that day when Tamil takes its due place as one of the official languages in the Union”.

இதன் தமிழாக்கம் :

“பழம் பெருமை மிக்க தமிழ் மொழி என்னுடைய மொழி என்பதை என்னால் எப்போதும் மறந்திட இயலாது. என்னுடைய முன்னோர்கள் பேசிய அநத மொழி என்னுடைய கவிஞர்கள் வாழ்க்கை நெறிகளையும் அறிவுரைகளையும் வழங்கிய அந்த மொழி வற்றாத அறிவை வாரி வழங்கிடும் இலக்கியங்கள் நிறைந்திருக்கும் அந்த மொழி அதற்கு உரிய இடத்தினைப் பெற்று மத்தியில் ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆகும் வரை நான் நிறைவடைய மாட்டேன்” என்று அறிஞர் அண்ணா மாநிலங்கள் அவையில் தமிழ், மத்திய ஆட்சி மொழி ஆவதற்காக 1965ஆம் ஆண்டிலேயே குரல் கொடுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களும், “இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆவதற்குத் தகுதிபெற்ற ஒரே மொழி, தமிழ் மொழிதான்” என்று நாடாளு மன்றத்திலேயே அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூறியுள்ளார்.

எனவே, தமிழின் செழுமை கருதி செம்மொழியாக ஏற்பளிப்புச் செய்த இந்திய அரசு, காலதாமதம் செய்யாமல் உலகளாவிய உயர்தனிச் செம்மொழியான தமிழை, மத்திய ஆட்சிமொழிகளுள் முதன்மையாக ஏற்று விரைவில் நடிவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகிறோம். அவ்விதம் நடவடிக்கை அறிவிப்பால் அறிஞர் அண்ணாவின் கோரிக்கை நிறைவு பெறுவதோடு கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் கண்ட கனவும் நனவாகும்.

தொகுத்தவர் : **பீமபெருமாள்,**
அண்ணாநகர், சென்னை.




# இந்திய ஆட்சி மொழிகளுள் ஒன்றாக தமிழும் இடம் பெறவேண்டும் மாநிலங்களவையில் அண்ணா பேச்சு

ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்படுவதற்கு முன்பு பணியாற்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் என்போரின் பொறுப்பில் மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டில் ஆங்காங்கே ஓராசிரியர் பள்ளிகள் என்பவை திறக்கப்பட்டன.

வேலையற்றோர் நிவாரணத் திட்டம் எனும் பெயரில் ஓராசிரியர் பள்ளிகள் உருவாக்கப்பட்டன. “ Planning Commission Schools under unemployment Relief Scheme’’ என்று அவை ஆங்கிலத்தில் அழைக்கப்பட்டன.

1950 களில் உயர்நிலைப்பள்ளி நீக்கப் பொதுத் தேர்வில் வெற்றி பெற்று (அந்த நாள்களில் அதுவே குறிப்பிடத்தக்க போதிய படிப்பு!) வேலையில்லாதிருந்த ஆயிரக்கணக்கானோர் ஓராசிரியர்களாக அமர்த்தப் பட்டனர். ஆசிரியர் பயிற்சி பெறாதோர் அவர்கள் என்பது கவனத்திற்குரியது. பயிற்சி பெற்றோராகவே போட வேண்டுமென்று குறியாக இருந்திருந்தால் அக்காலத்தில் அவ்வளவு பேர் கிட்டியிருக்க மாட்டார்கள். ஒரு சில ஆண்டுகளில் அந்த ஆசிரியரனைவரும் முறையான ஆசிரியர் பயிற்சி பெற்றுத் திரும்புமாறு ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது. படிப் படியாக ஓராசிரியர் பள்ளிகளில் இரண்டு மூன்று ஆசிரியர்கள் இடம் பெறும் நிலை உண்டாக்கப்பட்டு விட்டது.

அந்தக் கால கட்டத்தில் தமிழக அரசின் கல்வித் துறையில் ஆசிரியராக முதலில் அமர்த்தப்பட்ட நான், குறுகிய காலத்தில் பள்ளி ஆய்வாளனாக மாற்றப் பட்டுத் தொண்டாற்றும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றேன். எனவே பள்ளிகளின் எண்ணிக்கைப் பெருக்கத்தில் எனக்கு நேரடிப் பட்டறிவு உண்டு. 300க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் மக்கள் வாழும் சிற்றூர்களைக் கண்டுபிடித்து அந்த ஊர்களிலெல் லாம் பள்ளிகளை அமைக்கும் பெரும்பணியினைப் பள்ளி ஆய்வாளர்களாக இருந்தோர் நன்கு உழைத்த நிறைவேற்றினர்.



பள்ளிகளை நிறுவினால் மட்டும் போதுமா? அன்றாடங் காய்ச்சிக் குடும்பங்களைச் சேர்ந்த பல சிறுவர்கள் பள்ளிக்கு வருவார்கள் என்பதற்கு என்ன உறுதி? பள்ளிக்கு ஒரு வேளை வந்தாலும் பட்டினியால் வாடும் வறிய குடும்பங்களில் பிறந்த சிறு பிள்ளைகள் பசியுடன் பாடங்கேட்டால் பயன் விளையுமா? இதை ஆழமாய்க் கருதிப்பார்த்த காமராசர் ஏழைக் குழந்தைகட்கு இலவசமாகப் பகலுணவு திட்ட அரசு உதவித் தொகைகளுக்கான காசோலைகளை எடுத்துக் கொண்டு பல ஊர்களுக்கும் வந்து அவற்றைத் தலைமையாசிரியர்களிடம் சேர்ப்பித்த நிகழ்ச்சிகள் இன்றும் நினைவில் இருக்கின்றன.

# பெருந்தலைவர் காமராசர்

ஊராட்சி ஒன்றியங்கள் உருவான பிறகு படிப் படியான முறையில் மூன்று ஆண்டுகளில் கட்டாயக் கல்வித் திட்டத்தை நடப்புக்குக் கொண்டு வந்தார் காமராசர். அந்தக் கட்டத்தில் ஒன்றியங்களில் அமர்த் தப்பட்டிருந்த குமுகக் கல்வியாளர்களின் துணை யோடு ஊர் ஊராகச் சென்று பெற்றோர்களைக் கூட்டி சங்கம் அமைத்து, தமிழ்ச் சிறார்களைக் கல்வி பயில வைப்பதில் சரகக் கல்வியதிகாரிகள் குறிப் பிடத்தக்க வெற்றிகளைக் குவித்துக் காட்டினர்.

1959 ஆம் ஆண்டிலிருந்து 62ஆம் ஆண்டுவரை அருப்புக்கோட்டையிலும் விருதுநகரிலும் பணியாற்றிய எனக்குப் பெருந்தலைவர் காமராசரோடு அணுக்க மாய்ப் பழகுகின்ற நல்வாய்ப்பு நிறையக் கிட்டியது.

அதற்கும் முந்தியே அப்பெருந்தலைவரிடம் ஒரு சிறு அளவில் நான் அறிமுகமாகியிருந்தேன். மன்னர் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் நாற்பது ஆண்டு கட்குமுன் நான் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, அங்கு வருகை புரிந்த முதலமைச்சர் காமராசரைப் போற்றும் பாடலொன்றை இயற்றி அதை மாணாக்கரே ஆர்வம் மேலிடப் பாடுமாறு ஏற்பாடு செய்திருந்தேன்.

இசையின் இனிமையாலும் பாட்டினுள் அடங்கியிருந்த ஆட்சியின் அருஞ்செயல்களைச் சுட்டிக் காட்டும் பட்டியலாலும் அவ்வகையில் உணர்ச்சி வயப்பட்ட காமராசர் அப்பாடலை என்னிட மிருந்து பெற்று பத்தாயிரம் படிகள் அச்சிடுமாறு, தம்முடன் வந்த சட்டமன்ற உறுப்பினரை வேண்டிக் கொள்ளும் விந்தை அப்போது நேர்ந்தது. மேலும் கல்வி ஆய்வு அலுவலராக நான் மாற்றமுற்ற பின்னர் ஐந்தாண்டுத் திட்ட விளக்க நடவடிக்கைகளில் நானும் நிறையப் பங்கேற்க வாய்த்ததால் மாவட்ட ஆட்சியர், துணையாட்சியர் போன்ற அதிகாரிகளிலிருந்து கீழ்மட்ட அலுவலர்களை அரசின் பல துறையினர்க்கும் நான் தெரிந்தவனானேன்.

அந்த நிலையில் முதலமைச்சர் மாவட்டப் பகுதிகளில் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்ட வேளைகளில் உடன் செல்லும் அதிகாரிகளின் பரி வாரக் குழுவில் நானும் இடங்கி அவரின் நல்லெண் ணத்தைப் பெறும் நிகழ்ச்சிகள் நடந்தன. பள்ளிச் சீரமைப்பு மாநாடு, சீருடைகள் வழங்கு மாநாடு, புத்தகப்பை வழங்கு மாநாடு போன்று, நாங்கள் ஏற்பாடு செய்த பல மாநாடுகளில் கலந்து கொண்ட முதல்வர் அம்முயற்சிகளைப் பேருவகையோடும் பூரிப்புடனும் பாராட்டி ஊக்குவித்த செய்திகள் இங்கு தேவையில்லை. பல சிற்றூர்களில் எவ்வாறு திடீர்ப் பள்ளிகள் முளைத்தன என்பதை மட்டும் குறிப்பிட வேண்டும்.

மக்களிடம் குறை கேட்கும் சுற்றுப் பயணங்களில் காமராசரிடம் அக்காலத்திய சிற்றூர் மக்கள் வைத்த கோரிக்கைகளில் முதன்மையானவையாக இருந்தவை மூன்று. மின்சாரம், இணைப்புச்சாலை, பள்ளி என் பவையே அவை. நிலையான பரந்த ஒளியை ஊர் முழுதும் பாய்ச்ச வல்ல மின்சாரம் தங்களின் சுவை யற்ற சந்தம் மாறா வழமையான நாட்டுப்புற வாழ்வுக் குப் புதிய வெளிச்சம் கொண்டு வந்து சேர்க்கும் என நம்பினர். சலித்துப் போயிருந்த மக்கள் முதன்மைச் சாலைகளைச் சென்றடைய வெறும் ஒற்றையடிப் பாதைகளையும் கரடுமுரடான பழைமையான வண்டிப் பாதைகளை மட்டும் பயன்படுத்திக் கொண்டிருந்த மக்கள், முறையான இணைப்புச் சாலை போடப் பட்டுவிட்டால் இன்றியமையா உடனடி உதவிகட்காக பேருந்துகள் ஓடும் சாலையை விரைந்தடைய எளிதாக, ஏதுவாக இருக்கும் என்று சரியாகவே அவர்கள் கற்பனை செய்தனர். அடுத்த ஊரில் இருக்கும் பள்ளிக் குத் தம் பிஞ்சுகளை அன்றாடம் அனுப்பி வைப்பதி லுண்டான தொல்லைகள் நீங்கும் வண்ணம் தம் ஊரி லியே பள்ளியொன்று திறக்கப்பட்டால் தம் பிள்ளைகள் எழுதப் படிக்க மட்டுமாவது அடிப்படை கல்வி பெற்றுவிட முடியுமே என ஆர்வப்பட்டனர் பெற்றோர்.

காமராசர் அந்தச் சூழ்நிலையில் எப்படி வினை யாற்றினார் என்பது ஆர்வத்தூண்ட வல்ல, வழக்க மீறிய தனித்தன்மையான செய்தி. அரசின் பணவொதுக் கீட்டிற்கிணங்க இணைப்புச்சாலை அமைப்பதற்கான வாய்ப்பு பற்றி வட்டார வளர்ச்சி அலுவலரிடமும் அவ்வூருக்கெனத் தனியே ஒரு பள்ளி நிறுவுவதற்கான கல்வித்துறை நெறிகள் குறித்த என்னிடமும் (பிற பகுதி களில் உரிய கல்வி அலுவலர்களிடமும்) கலந்து பேசிய பின்பு, குழுமிய மக்களிடம் முதல்வர் இப்படிக் கூறுவார்,

“மின்சாரம் வந்து கொண்டேயிருக்கின்றது. தமிழ் நாட்டின் அத்தனை சிற்றூர்களுக்கும் குறிப்பிட்ட காலத்திற்குள் மின்சாரம் வழங்கிவிட வேண்டுமென்று அரசு முழு மூச்சாக முயற்சியில் இறங்கியுள்ளது. ஆகவே, உங்களுக்கு இன்னும் சில மாதங்களில் மின்சாரம் வழங்கப்பட்டு விடும். இதை நீங்கள் உறுதியாக நம்பலாம். அடுத்து, இணைப்புச்சாலை பற்றி உங்கள் பி.டி.ஓ.விடம் பேசினேன்.

கையிருப்பில் உள்ள நிதி ஒதுக்கீட்டிற்குத் தகுந்த படி கூடிய விரைவில் செய்து விடுவதாக அவர் உறுதி கூறியிருக்கிறார். மூன்றாவதாக நீங்கள் கேட்டுள்ள பள்ளிக் கூடத்தை இதோ இங்கு இருக்கிறாரே இன்ஸ்பெக்டர், (என்னை புன்னகையுடன் சுட்டிக் காட்டி) இவர் நினைத்தால் அந்தச் சட்டம் இந்தச் சட்டம் என்று இடையூறு செய்யாமல் இருந்தால் இ.டி.ஓ. அவர்களின் ஒப்புதலோடு உடனடியாக ஒரு துணைப் பள்ளிக் கூடத்தையாவது இங்கு உண்டாக்கி விட முடியும். சட்டங்களைக் காட்டி அதிகாரிகள் செய்யும் குறுக்கீடுகளால்தான் உடனடி யாக மக்களுக்கு நன்மை செய்ய முடியாமல் சுணக்கம் ஏற்பட்டு விடுகிறது.

*இப்படிப் பேசி எங்களை நோக்கிச் சிரித்துக் கொண்டே கண் சிமிட்டிவிட்டுச் சற்று நிறுத்துவார் பெருந்தலைவர்.*

*நான் அடக்கத்துடன் எழுந்து நின்று அச்சமின்றி, உரிமையுணர்வோடு கருத்துரைப்பேன். பெருமதிப்பிற் குரிய முதல்வரய்யா அவர்கள் குறிப்பிட்டபடி சட்டம் என்று எடுத்துக் கொண்டால் இந்த ஊரில் பள்ளி உண்டாகவே முடியாது. இவ்வூர் மக்கள் தொகை 300க்கும் குறைவுதான். அருகிலேயே ஒரு கல்தொலை வுக்குள் தொடக்கப்பள்ளி இருக்கிறது. ஆனால் இக்குடியிருப்பிலிருந்து 20க்கு மேற்பட்ட சிறுபாலர்கள் அன்றாடம் நடந்து சென்று அப்பள்ளியில் படித்து விட்டு வீடு திரும்பும் நிலை கவலையளிக்கக்கூடியது. இரண்டு ஊர்களுக்கும் இடையே ஏதேனும் வாய்க் கால் உள்ளதா? என்று நான் இங்கே கேட்டபோது, ஓர் ஓடையுண்டு என்றார்கள். அந்தக் காரணம் போதும். ஓடையில் நீர் ஓடுவதுண்டா? என்பதைப் பற்றிக் கருதாமல், இயற்கைத் தடை (Natural barrier) இருப்பதாக இக்குடியிருப்பில் துணைப்பள்ளி (Feeder School) ஒன்றைத் திறக்க நான் பரிந்துரை செய்ய முடியும்.*

*என் கருத்துரையில் பொதிந்துகிடக்கும் பல பொருள்களை எண்ணி, முதல்வர் முக மலர்ச்சியோடு, "ரொம்ப சந்தோசம் இதற்காகத்தான் இந்த இன்ஸ் பெக்டரை கையோடு கூட்டிக் கொண்டு வருகிறேன். அவரின் பரிந்துரையை மாவட்டக் கல்வி அதிகாரி மறுக்க மாட்டார். அப்புறமென்ன? இங்கேயே இப்போதே பள்ளிக்கூடத்தைத் திறந்து விடலாம் னேன்!" என்றுரைத்து "ஊர்க்காரங்க கேட்ட மூன்றில் ஒன்றை உடனடியாகக் கொடுத்தாச்சய்யா'' என அறிவித்தார்.*

*காமராசர் ஆட்சியில் பல்லாயிரக்கணக்கான பள்ளிகள், எப்படியெல்லாம் முளைத்தன என்னும் வரலாற்றை இன்றைய இளைஞர் தங்கள் மூளைகளில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்ற விருப்பத் தினாலேயே இவற்றை எழுத நேர்ந்தது. தற்போது வாழும் தமிழக மக்களில் பாதியளவுப் பேர் காமராசர் தோற்றுவித்த பள்ளிக் கழனிகளில் விளைந்திட்ட பயிர்களே. தமிழக அரசின் வருவாயில் காற்பங்கினைக் கல்வித்தறையில் அந்த நாள்களில் நீண்ட காலத் திட்டமாக அவர் முதலீடு செய்ததன் பலன்களைத் தான் இந்த நாள்களில் நாடு நுகர்ந்து கொண்டிருக் கிறது. அவரின் படைப்பாற்றல் இது.*

*காத்தருளி காமராசர் என்பதாக தந்தை பெரியார் அழைத்த தொலைநோக்கினையும் பொருத்தத்தையும் தற்காலத் தமிழ்த் தலைமுறையினர் தேர்ந்து தீர்மானிக் கட்டும்.*

*பெரியார் பேருரையாளர்* ***அ. இறையனார்*** *அவர்களின் கட்டுரை.*



# ஆதார் கட்டாயம்?

அரசு சேவைகளை பெறஆதார் எண் அவசியம்.

தேசப் பாதுகாப்புக்கு மட்டுமேஆதார் பயன்பட வேண்டும். வங்கிக்கணக்கு தொடங்க, மொபைல் எண் பெறஆதார் எண் கட்டாயம் இல்லை. ஆதார் இல்லை என்பதற்காகதனிநபர் உரிமைகளை மறுக்கக்கூடாது. கல்விஎன்பது ஒவ்வொருவரின் அடிப்படை உரிமை என்பதால் அதற்கு ஆதார் எண்ணை கட்டாயமாக்க கூடாது.

சி.பி.எஸ்.இ தேர்வு, நீட் தேர்வுக்கு ஆதாரைக் கட்டாய மாக்ககூடாது. தனியார் நிறுவனங்கள்ஆதார் தகவல் களை கோருவது சட்டவிரோதம். தனியார் நிறுவனங்கள் ஆதாரைக் கட்டாயப்படுத்தக்கூடாது. 99% மக்கள்ஆதார் பெற்றுவிட்டதால் அதனைதடை செய்வது சரியல்ல.


ஆதார் தனிநபர் சுதந்திரத்தைப்பாதிக்கிறது என்பது மட்டுமேபிரச்சனையாகஉள்ளது –நீதிபதி ஏ.கே.சிக்ரி.

சிறந்ததாக இருப்பதை விடதனித்துவமாக இருப்பதே மேல். கடந்தசில ஆண்டுகளில் அதிகமாக பேசப்படும் ஒன்றாக ஆதார் மாறி இருக்கிறது. ஒருவருக்கு கொடுக்கப்படும் ஆதார் அடையாள அட்டையை வேறு ஒருவருக்கு கொடுக்கமுடியாதவகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. ஆதாருக்காக குறைந்தபட்சத் தகவல்களே பெறப்படுகின்றன – நீதிபதி ஏ.கே.சிக்ரி.

"ஆதார், விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு அடையாளத்தை வழங்கியிருக்கிறது. ஆதார் எண்ணை போலியாக உருவாக்க முடியாது என்பதால், அது மற்ற அடையாளச் சான்றுகளிலிருந்து வேறுபடுகிறது" ஏ.கே. சிக்ரி.

**பவானி** எம்.ஏ.,

# தமிழை வைத்து நான் பணம் சம்பாதிக்க விரும்பவில்லை!



**தமிழை வைத்து நான் பணம் சம்பாதிக்க விரும்பவில்லை. என்னுடைய பணியைத்தான் செய்தேன். அதற்குக் கூலி பெறுவது சரியாக இல்லை. என்னுடைய தமிழ்ப்பற்றுக்கு நான் என்றுமே ஆதாயம் தேடுவதில்லை.**

ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு அழைத்துச் சென்று கௌர விக்கச் செய்தார்.

அப்பொழுது, அண்ணாமலைச் செட்டியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் சிறப்பு இயல்புகளைப் பற்றிப் பாராட்டிப் பேசினார். கவிமணியின் தமிழ்ப்பணியைக் குறித்து விரிவாக எடுத்துக் காட்டினார். அவருடைய மேன்மையறிந்து அதற்கு மதிப்புத் தருவதற்காக ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறுக்கு ஒரு காசோலை கொடுத்தார்.

கவிமணி அவர்கள் அந்தக் காசோலையை வாங்கிக் கொள்ளவில்லை. திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரும், அன்பர்கள் சிலரும் சேர்ந்து அந்தப் பணத்திற்கு வீட்டிற்குத் தேவையான வெள்ளிப் பாத்திரங்களை வாங்கினார்கள். பின்பு அதனை எடுத்துக் கொண்டு கவிமணியின் வீட்டிற்குச் சென்றார்கள். கவிமணியை சிறப்பிக்கும் வகையில் அந்த வெள்ளிப் பொருள்களை அவரிடம் தந்தார்கள்.

அப்போது கவிமணி அவரிகளிடம் தமிழை வைத்து நான் பணம் சம்பாதிக்க விரும்பவில்லை. என்னுடைய பணியைத்தான் செய்தேன். அதற்குக் கூலி பெறுவது சரியாக இல்லை. என்னுடைய தமிழ்ப்பற்றுக்கு நான் என்றுமே ஆதாயம் தேடுவதில்லை. எனக்கு இவை யாவும் வேண்டாம். திரும்ப எடுத்துக் கொண்டு போகும்படி அன்புடன் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

ஆனால் திரு. டி.கே.சிதம்பரநாதரும் மற்றவர்களும் வலுக்கட்டாயமாக அந்தப் பொருட்களை ஏற்றுக் கொள்ளும்படி கூறிவிட்டுச் சென்றனர்.

அவர்கள் சென்ற பிறகு கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை செய்த செயல் என்ன தெரியுமா? ரூபாய் இரண்டாயிரத்து ஐநூற்றுக்கான காசோலை ஒன்றை எழுதினார். அதனைக் கேரளாவில் உள்ள ஒரு கல்லூரியின் 'தமிழ்ப்படிப்பு' நிதிக்காக அனுப்பி வைத்தார்.

கவிமணியின் தமிழ்ப்பற்றைக் கண்ட நாம் வியந்து போற்றலே அவருக்குத் தமிழர்கள் செய்யும் நன்றிக் கடனாகும். கவிமணி அவர்களின் புகழ் ஓங்குக!


**– பீமபெருமாள்**

# குப்பை சேகரிக்கும் ரோபோவை கண்டுபிடித்த பள்ளி மாணவர்

வீடு வீடாகச் சென்று குப்பை சேகரிக்கும் ரோபோவை பள்ளி மாணவர் ஒருவர் உருவாக்கிச் சாதனை புரிந்திருக்கிறார்.

கிளின்டன் ரெமோ ராஜ் என்ற அந்த மாணவர் காரைக்கால் கோட்டுச்சேரியைச் சேர்ந்தவர். காரைக்காலில் உள்ள வித்யோதயா உயர்நிலைப் பள்ளியில் 8ஆம் வகுப்பு படிக்கிறார்.

தற்போது ஸ்வச் பாரத் எனப்படும் தூய்மை இந்தியா திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்படுகிறது. இதுகுறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருவதால், பொதுமக்கள், மாணவர்கள் மத்தியில் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. நாம் இருக்கும் இடத்தையும், நமது சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பரவலாக ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழலில், குப்பை சேகரிப்பதற்கு ஒரு தானியங்கி எந்திரத்தை உருவாக்கினால் சீராகவும் செம்மையாகவும் இப்பணி நடக்கும் என்று நான் எண்ணினேன். அந்தச் சிந்தனையின் அடிப்படையில் இந்த ரோபோவை உருவாக்கினேன். மற்றொரு முக்கியமான விஷயமும் இருக்கிறது.



தற்போது மாநகராட்சி, நகராட்சி ஊழியர்கள் வீடுதோறும் வந்து வண்டியில் குப்பை சேகரித்துச் செல்கிறார்கள். அவர்களும் மனிதர்கள் தான். குப்பை சேகரிக்கும் அவர்களின் ஆரோக்கியம், கண்ணியம் குறித்தும் நாம் கவனம் கொள்ள வேண்டும். இப்படி தானியங்கி எந்திரம் செயல்படத் தொடங்கினால், மனிதர்களை இப்பணியில் ஈடுபடுத்த வேண்டாமே?

இது சக்கரங்களின் உதவியுடன் தெருவில் நகர்ந்து செல்லும், நம் வீட்டுக்கு முன்பாக இது வரும்போது இதன் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சினால் போதும். உடனே நின்றுவிடும். அவ்வாறு வெளிச்சத்தைப் பாய்ச்சுவதற்கு “டார்ச் லைட்“ எனப்படும் கைவிளக்கைக் கூட பயன்படுத்தலாம். தன் மீது பாய்ச்சப்படும் வெளிச்சத்தை இதில் உள்ள சென்சார் உணர்ந்து நிற்கும். அடுத்து, இதன் குப்பை சேகரிக்கும் கொள்கலனின் மூடி தானாகத் திறக்கும். அதனுள் குப்பையைப் போட்டுவிட்டு விளக்கை அணைத்தால் ரோபோ அடுத்த வீட்டுக்கு நகர்ந்து சென்று விடும். வீடுகளில்

குப்பையைச் சேகரித்த பின்பு, தானாகவே குப்பைக் கிடங்குக்குச் சென்று மொத்தக் குப்பையையும் கொட்டிவிடும்.

மழை, வெயில், இரவு, பகல் என்ற எந்தச் சூழ்நிலையிலும் இது இயங்கும். இந்த எந்திரம் பேட்டரி மின்சாரத்தில் இயங்கக்கூடியது. ஒருமுறை சார்ஜ் செய்தால் 6 மணி நேரம் வரை தொடர்ந்து இயங்கும்.

தற்போது ஒரு மாதிரி அமைப்பாக இதை உருவாக்கியிருக்கிறோம் இதற்கே, ரூ.7 ஆயிரம் செலவாகிவிட்டது. எங்கள் பட்ஜெட்டுக்கு உட்பட்டு ஒரு மாடலாக இதைத் தயாரித்திருக்கிறோம். இந்தத் தொழில்நுட்பத்தை அப்படியே பயன்படுத்தி, நடைமுறை வாழ்வில் பயன்படுத்தக்கூடிய ரோபோவை உருவாக்க முடியும்.

இப்படி ஒரு தானியங்கி எந்திரத்தை உருவாக் கலாம் என்ற சிந்தனை எனக்குப் பிறந்தது. இது குறித்து நான் எங்கள் அறிவியல் ஆசிரியை புனிதா விடம் விவாதித்து, அவர் கூறிய யோசனைகளையும் சேர்த்துக் கொண்டு அவரது வழிகாட்டுதல்படி இதை உருவாக்கி முடித்தேன்.

இன்று உள்ளாட்சி அமைப்புகளில் குப்பை அள்ளும் தொழிலாளர் பற்றாக்குறை நிலவுகிறது. அதனால், பல்வேறு இடங்களில் குப்பை தேங்கும் நிலை காணப்படுகிறது. இந்நிலையில் இது போன்ற ரோபோக்களை செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தால், சீராகவும் திட்டமிட்ட முறையிலும் குப்பைகளைச் சேகரித்து அப்புறப்படுத்தலாம். குப்பை அள்ளும் தொழிலாளர்களை எதிர்பார்க்காமல், அந்தந்தப் பகுதி மக்கள், அடுக்குமாடிக் குடியிருப்புவாசிகள்கூட இது போன்ற எந்திரத்தை வாங்கிப் பயன்படுத்தி, தங்கள் பகுதியை சுத்தம், சுகாதாரமாகப் பராமரிக்கலாம்.

இந்த ரோபோவுக்கான அடிப்படைத் திட்டமிடல் முடிந்தபிறகு இரண்டே வார காலத்தில் இதை உருவாக்கி முடித்துவிட்டோம். இந்த எந்திரத்தை நாங்கள் இயக்கிக் காண்பித்தபோது பலரும் வியந்தார்கள். இது மிகவும் பயனுள்ள கண்டுபிடிப்பாக இருக்கும் என்று பாராட்டிக் கூறினார்கள்.

இதுவரை அறிவியல் கண்காட்சி எதிலும் இதை காட்சிக்கு வைக்கவில்லை. ஆனால், காரைக்கால் துறைமுகத்தால் நடத்தப்படும் இன்னொவேட்டிவ் கிட்ஸ் எக்ஸ்போ எனப்படும் பள்ளி மாணவர் களுக்கான அறிவியல் போட்டியில் இதை இடம்பெறச் செய்ய திட்டமிட்டிருக்கிறோம். இன்ஸ்பையர் எனப்படும் தேசிய அளவிலான அறிவியல் கண்டு பிடிப்புப் போட்டியில் பங்கேற்கவும் எண்ணம்.

எங்கள் அறிவியல் ஆசிரியையுடன், எங்கள் பள்ளித் தாளாளர் சைன், தலைமையாசிரியை உமா தேவி ஆகியோர் மிகவும் உறுதுணையாகவும் உதவி யாகவும் இருந்தனர். என்ஜினீயரான எனது தந்தை மரியசெல்வம், அம்மா ஜோஸ்பின் விமலா, தங்கை ஆஸ்டின் மேரி ஆகியோரும் என்னை உற்சாகப் படுத்தி, உன்னால் முடியும் என்ற நம்பிக்கை கொடுத்து இந்த ரோபோவை உருவாக்க வைத்தனர்.

எதிர்காலத்தில் ஒரு விஞ்ஞானி ஆக வேண்டும் என்பது எனது ஆசை, விஞ்ஞானி ஆகி, குப்பை சேகரிக்கும் ரோபோ போன்ற சமூகத்துக்குப் பயனுள்ள பல கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

நன்றி : தினத்தந்தி

## இதுதான் எனக்குக்கூலி!

வங்கதேசத்தில் சிறிய ரயில்நிலையம் ஒன்றில் ரயில் வந்து நின்றது. நல்ல உடை அணிந்த இளைஞன் ஒருவன் கூலி கூலி எனக்கூவி அழைத்தபடி நின்றான். அவனிடம் சிறிய பெட்டி ஒன்று மட்டுமே இருந்தது.


கிராம ரயில் நிலையத்தில் கூலி எங்கே கிடைப்பான்? அச்சமயம் நடுத்தர வயதுடைய ஒருவர் கிராமவாசியைப் போன்று உடையணிந்து அந்த இளைஞனை நோக்கி வந்தார். இளைஞர் அவரைக் கூலிக்காரன் என நினைத்து நீங்கள் எல்லோரும் சோம்பேறிகள். உம், தூக்கிக் கொண்டு நட என்றான்.

அந்த மனிதர் ஏதும் பேசாமல் அவனுடைய பெட்டியைத் தூக்கிக் கொண்டு அமைதியாக நடந்தார். வீடு சேர்ந்ததும் இளைஞன் பெட்டியைக் கீழே வைக்கச் சொன்னான். கூலிக்காரருக்குக் கொடுக்க பணத்தை எடுத்தான். அந்த மனிதரோ நன்றி! இதெல்லாம் வேண்டாம் என்றார்.

“ஏன்? என்று அந்த இளைஞன் ஆச்சரியத்துடன் கேட்டான். அதுசமயம், அந்த இளைஞனின் அண்ணன் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்து பெட்டியைத் தூக்கி வந்த மனிதரை வணங்கி நின்றார். அப்புறம்தான் தனது பெட்டியைத் தூக்கி வந்த அந்த மனிதர் வங்காளத்தில் புகழ்மிக்க அறிஞர் ஈஸ்வர சந்திர வித்யாசாகர் என்பது அந்த இளைஞனுக்குத் தெரிய வந்தது.

தெரிந்தவுடனே, அவருடைய காலில் விழுந்து வணங்கி தன் தவறுக்கு மன்னிப்புக் கோரினான் அந்த இளைஞன். அவனுக்குப் பதிலளிக்கும் விதமாக வித்யாசாகர், எனது நாட்டு மக்கள் வறட்டு ஜம்பத்தைக் கைவிட வேண்டும். தனது பணிகளைத் தம் கையாலேயே செய்து கொள்வதுதான் கௌரவமான விசயம் என்பதை உணர வேண்டும். அவர்களது சொந்தக்காலில் அவர்கள் நிற்க வேண்டும். அதுதான் எனக்குக் கூலி என்றார்.

தொகுத்தவர்: **பீமபெருமாள்**



# மண் பாத்திரத்தில் சமைத்துண்பதே சாலச்சிறந்தது

விலை மலிவு, குறைந்த எடை, துருப்பிடிக்காத தன்மை, நீண்ட நாள் உழைக்கக்கூடியது உள்ளிட்ட காரணங்களாலேயே நாம் அலுமினியப் பாத்திரங் களை அதிகமாகப் பயன்படுத்துகிறோம்.

ஆனால், இந்தப் பாத்திரத்தில் நாம் உணவு சமைக்கும்போது வெப்பநிலை அதிகரிக்க அதிகரிக்க அலுமினியத் தகட்டில் உள்ள அலுமினியமானது சமைக்கும் உணவில் சிறிது சிறிதாகக் கலக்கும்.

தொடர்ந்து இதில் அடிக்கடி சமைத்து உண்பதால் உணவு வழியாக நமக்குள்ளே போகும் அலுமினியத் தின் அளவும் அதிகரித்து மூளையில் உள்ள நரம்பு மண்டலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும், இது, ‘அல்சீமர்’ எனப்படும் மறதி நோயை உண்டாக்குகிறது.

குறிப்பாக, தக்காளி, புளி, எலுமிச்சை உள்ளிட்ட அமிலத்தன்மை அதிகமாக உள்ள உணவுகளை, அலுமினியப் பாத்திரத்தில் சமைப்பதைத் தவிர்ப்பது நல்லது.

அலுமினியப் பாத்திரத்தில் தேநீரை சூடு செய்யும்போதோ, உப்பு சேர்த்து சமைக்கும் போதோ, அதில் உள்ள அமிலமும் அலுமினியமும் வினைபுரிந்து உணவில் உள்ள வைட்டமின் சத்துகளை இழக்கச் செய்யும்.

அதுபோலவே, தினசரி சமையலுக்குத் தாமிரப் பாத்திரம் பயன்படுத்தக்கூடாது. ஆனால், வெந்நீர் போடப் பயன்படுத்தலாம். தாமிரம், பித்தளைப் பாத்திரங்களை தினமும் தேய்த்து சுத்தம் செய்தபின், தண்ணீர் பிடித்து வைத்து, குடிப்பது நல்லது.

‘நான்ஸ்டிக்’ பாத்திரங்களை நீண்ட நேரம் சூடு செய்யும் போதும் அதில் பூசப்பட்டுள்ள ரசாயனம் உருகி, உணவுடன் கலந்து, உடலுக்குள் சென்று, புற்று நோயை உண்டாக்குகிறது. சிறுநீரகம், கல்லீர லைப் பாதிக்கிறது.

1. இதுவே, மண்ணால் செய்த சட்டி, பானை யையோ, இரும்பு தோசைக்கல்லையோ நீண்ட நேரம் தீயில் வைத்துச் சமைத்தால், ஆரோக்கியத்துக்கு எந்தக் குறைபாடும் ஏற்படாது.

2. மண்பாத்திரத்தில் சமைக்கும் உணவானது எளிதில் கெட்டுப் போகாது.

3. தயிரை மண்பாத்திரத்தில் உறைக்கு ஊற்றி, ருசித்து விட்டால், பிறகு, வேறு எந்தப் பாத்திரத்தை யும் பயன்படுத்த மாட்டீர்கள்.

4. ஏனெனில் மண் பாத்திரரத் தயிரில் அப்படி யொரு இனிமையான மணமும், சுவையும் கிடைக்கும்.

ஆகவே, சத்துள்ள உணவு, ஆரோக்கியமான வாழ்க்கைக்கு நம் சமையல் அறையில் மண், கண்ணா டிப் பாத்திரங்கள், தட்டுகள், டம்ளர்கள், இரும்பு வாணலி, தோசைச் சட்டி போன்றவற்றையே பயன் படுத்துவோம்.

தொகுத்தவர் :

**பீமபெருமாள்**

அண்ணாநகர்த் தமிழ்ச்சங்கம்

95009 30460

போலீஸ்இடமே திருடிவிட்டு, திருடிய நிலத்தை நீதிமன்றமே சொன்னாலும் கூடதர முடியாது என தில்லாகச் சொல்ல முடிகிறது என்றால்...

அப்படி ஒரு தைரியம் தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக் கழகத்திற்கு எப்படி ஏற்பட்டது?

தங்களின் 58 ஏக்கர் நிலத்தை சாஸ்த்ரா பல்கலை ஆக்கிரமித்துள்ளது என்று 30 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாடு போலீஸ் ஹவுசிங் கார்ப்பரேசன் புகார் கொடுத்தது!

மாவட்டநிர்வாகம் வழக்கு கொடுத்து, அது உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் என அலைகழிக்கப் பட்டு தீர்ப்பு வந்ததும். "இடத்தை காலி செய்வதாவது, நாங்களாவது "என்கிறார்கள்!

மத்திய அரசு சாஸ்த்ராவின் பக்கம் சாய்ந்து நிற்கிறது. அதனால், மாநில அரசு மவுனம் காக்கிறது.

ஆச்சாரஅனுஸ்டானங்களை பின்பற்றும் ஒழுக்க சீலர்களாகத் தங்களை காட்டிக் கொள்ளும் பிராமணர்களான சாஸ்த்ரா பல்கலை உரிமையாளர் களின் இந்த ஆக்கிரமிப்பு நியாயம்தானா?

இவ்வளவு பெரியஆக்கிரமிப்பை வேறுயாராவது செய்திருந்தால் இப்படிவிட்டு வைப்பார்களா?

இந்த ஆக்கிரமிப்பு நாளை மற்றவர்களுக்கு ஒரு முன் உதாரணமாகிவிடாதா? இது குறித்த நீதி மன்றத் தீர்ப்பையும், இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடி வரும் மக்களின் போராட்டச் செய்திகளை யும் எந்தெந்த மீடியாக்கள் மூச்சுவிடாமல், கப்சிப்பென மூடி மறைக்கின்றனஎன்பதைஉங்களின் கவனத்திற்கே விட்டுவிடுகிறேன்.

கடந்த 30 ஆண்டுகளாக சாஸ்த்ரா பல்கலையின் பல்வேறு பராக்கிரமங்களை, சாதனைகளை விலாவாரி யாக வியந்தோதிவரும் பற்பலஊடகங்கள்இப்போது செவிடர்களாக, ஊமைகளாக, குருடர்களாக திடீரென்று மாறிய விந்தையை வர்ணிக்கும் சக்தியற் றுத் தவிக்கிறேன் ஆக்கிரமித்தநிலத்தை சாஸ்த்ரா விடமிருந்து மீட்க, நீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்த வேண்டும் என்று மு.க.ஸ்டாலினைத் தவிர வேறு அரசியல் தலைவர்கள் முணு முணுக்கக் கூடத் திராணியற்று அமைதிகாப்பதைஎப்படிப் புரிந்து கொள்வது?

சென்ற வருடம் மே மாதம் இதேசாஸ்த்ராவில் ஆர்.எஸ்.எஸ்.முகாம் நடத்தி, ஆயுத பயிற்சி வழங்கி யதை நினைவூட்ட விரும்புகிறேன். இந்தியாவில் சட்டத்தின் ஆட்சி நடக்கிறதா?

அல்லது சாஸ்த்திரங்களின் ஆட்சி நடக்கிறதா? என்பது உயர்நீதிமன்றத்தின் நிலமீட்பு ஆணை நிறை வேற்றப்படுவதை பொறுத்துதான் உள்ளது.

இப்படி ஒரு பதிவை எழுதினால், சாவித்திரி கண்ணன் ஒரு பிராமண துவேசி எனப்பாய்ந்து கடித்துக் குதற வந்துவிடுவீர்களே!



# நிலத்தை ஆக்கிரமித்த சாஸ்த்ரா பல்கலைக்கழகம்

விடுதலைப் புலிகள் இஸ்லாமியர்களை இனப்படு கொலை செய்ததாகவும் இஸ்லாமியர்களுக்கு எதிரானவர்கள் என்று சொல்லும் என் அருமை தமிழ்ச் சொந்தங்களுக்கு இந்தப் பதிவு.

தமிழர்களை பிரித்தாளும் உத்தியை சிறிலங்கா அரசு அறிமுகப்படுத்தியிருந்தாலும் அதை தீவிரப் படுத்தியது இந்திய அரசே.

1987ஆம் ஆண்டு “இஸ்லாமியத் தமிழரும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்“ என்ற நூல் ஒன்றை விடுதலைப் புலிகள் வெளியிட்டிருந்தனர். அதில் புத்தளம் முதல் யாழ்ப்பாணம் வரை முஸ்லீம்களின் சனத்தொகை, சிங்களவர்களின் ஆக்கிரமிப்பு மட்டுமல்லாது தமிழீழ விடுதலையின் முக்கியத்து வமும் விளங்கப்படுத்தப்பட்டிருக்கிறது.

இஸ்லாமியத் தமிழரும் மற்றைய தமிழர்களோடு இணைந்து விடுதலைப் போராட்டத்தில் அதிக அக்கறை எடுத்தனர். குறிப்பாக புலிகள் அமைப்பில் இஸ்லாமியத் தமிழர்கள் நம்பிக்கை கொள்ள ஆரம்பித்தனர். இந்த காலப்பகுதியில் சிறிலங்கா அரசு, இஸ்லாமிய இளைஞர்களை மாத்திரம் உள்ளடக்கிய ஊர்காவற் படையை கிழக்கு மாகாணத்தில் உருவாக்கி அவர்களிடம் ஆயுதங்களைக் கொடுத்து, அவர்களை மற்றைய தமிழர்களுக்கு எதிராக அதிகாரம் செய்யும் வகையில், திட்டங்களை வகுத்து பதற்றத்தை அதிகரித்தனர்.

சமகாலத்தில், ராசீவ்காந்தி தலைமையிலான இந்திய அரசு, தமது கைப்பாவைகளாக செயற்பட்ட தமிழ் ஆயுதக்குழுக்களை வைத்து வடக்கில் இஸ்லாமிய தமிழருக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி அதை புலிகள் மீது பழி போட்டனர்.

உச்சகட்டமாக 1990இல் அவசர அவசரமாக இஸ்லாமியத் தமிழர்களை ‘புலிகளின் கட்டளை’ என்ற பெயரில் வெளியேற்றினர். அதே ஆண்டே காத்தான் குடி பள்ளிவாசலில் படுகொலையை மேற்கொண்டனர்.

# புலிகள் முகமதியர்களுக்கு எதிரானவர்கள் அல்ல



தமிழ் இராஜேந்திரன்

*ஈழத்தில் அதுவும் இயக்கங்களில் நவீன தொடர்பால் வசதியில்லாத காலத்தில், ஒரே நாளில் எல்லா இடங்களிலும் கச்சிதமாக முஸ்லீம்களை வெளியேற்ற எப்படி புலிகளுக்கு சாத்தியமாகியிருக்கும்? போராடப் போன இஸ்லாமியத் தமிழ் போராளிகளின் குடும்பங்களையுமல்லவா புலிகள் வெளியேற்றினர் என்று பொருள்படும்?*

*சிங்கள அரசுகளால் இஸ்லாமியப் பள்ளிவாசல்கள் மீது நடத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதல்களைச் சுட்டிக்காட்டியிருக்கும் புலிகள் அதே தவறை அதுவும் முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்ட அதே ஆண்டே செந்திருப்பார்களா? மக்களை சிந்திக்கக்கூட விடாமல் புலிகள் மீது பழிசுமத்தி பெருமெடுப்பில் ஊடகப்படுத்தப்பட்டது.*

*முஸ்லீம் அரசியல்வாதிகள் தமது நலனுக்காகவும் சிறிலங்கா அரசு தமது நலனுக்காகவும் இந்திய அரசு தமது நலனுக்காகவும் இஸ்லாமியத் தமிழரை தமிழர் இல்லை என்று ஊடகப்படுத்தி அதை மக்களிடத்தில் விதைத்து பிரித்தாளும் அரசியலில் லாபம் அடைந்தனர்.*

*தமிழீழ விடுதலைக்காய் தம்மை ஆகுதியாக்கிய எத்தனையோ ஜுனைதீன்களின் ஆன்மா இன்னமும் விடுதலைத் தாகத்துடன்தான் இருக்கும்.*

*மாவீரர்களான விடுதலைப் புலிகளில் முஸ்லிம்* போராளிகளின் விபரங்கள்.

1) ரிபுதீன் முகமட் சாபீர், ஆண். நிலை - வீரவேங்கை, இயக்கப் பெயர் - சாபீர், ஊர் - தியாவெட்டுவான், மாவட்டம் - மட்டக்களப்பு, வீரச்சாவு - 13-05-1988, நிகழ்வு - நாசிவன் தீவில் ரெலோ கும்பலினால் மேற்கொள்ளப் பட்ட வாள்வெட்டில் வீரச்சாவு.

2) வீரவேங்கை ரகீம். (ஆண்) நிலை - வீரவேங்கை, இயக்கப் பெயர் - ரகீம், வீரச்சாவு - 8- 05- 1986.

3) வீரவேங்கை உஸ்மான் கிழங்கு அப்துல் சாதிக். (ஆண்) நிலை - வீரவேங்கை, இயக்கப்பெயர் - உஸ்மான் கிழங்கு. ஊர் - யாழ்ப்பாணம், வீரப்பிறப்பு - 10-05-1966, வீரச்சாவு - 25-08-1986, நிகழ்வு - யாழ்ப்பாணம் கோட்டை யில் சிறிலங்கப் படையினருடனான சமரில் வீரச்சாவு.

4) வீரவேங்கை லத்தீப் முகமது அலியார், (ஆண்) நிலை - வீரவேங்கை, இயக்கப்பெயர் - லத்தீப், ஊர்- ஒல்லிக்குளம், காத்தான்குடி, மட்டக்களப்பு மாவட்டம். வீரப்பிறப்பு - 16-11-1962. வீரச்சாவு - 24-12-1986, நிகழ்வு - மட்டக்களப்பு தாழங்குடாவில் இ.பி. ஆர்.எல். எப்.கும்பல் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவு.

5) கப்டன் பாறூக் அகமது லெப்பை முகமது கனிபா (ஆண்) ஊர் - அக்கறைப்பற்று, அம்பாறை. வீரச்சாவு - 7-1-1987.

6) கப்டன் குட்டி (தினேஷ்) முகமது அலிபா முகமது ஹசன் (ஆண்) நிலை - கப்டன், இயக்கப்பெயர் - குட்டி (தினேஷ்), ஊர் - பேராறு, கந்தளாய், திருகோண மலை. வீரச்சாவு - 28-04-1987, நிகழ்வு - திருகோணமலை கந்தளாயில் முஸ்லிம் ஊர்க்காவல் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவு.

7) வீரவேங்கை ரகுமான், (ஆண்) நிலை - வீரவேங்கை, இயக்கப் பெயர் : ரகுமான், வீரச்சாவு - 08-05-1986.

8) வீரவேங்கை சலீம் (ஆண்) வீரச்சாவு - 3-7-1987, நிகழ்வு . அம்பாறை மாவட்டம் தாண்டியடிப் பகுதியில் சிறிலங்கப் படையினருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு.

9) வீரவேங்கை முகமட் நசீர் (ஆண்) இயக்கப் பெயர் நசீர், ஊர் - காங்கேயன்ஓடை, மட்டக்களப்பு, வீரப்பிறப்பு - 15-3-1963, வீரச்சாவு - 30-12-1987, நிகழ்வு - மட்டக்களப்பு காத்தான்குடியில் ஜிகாத் கும்பல் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவு.

10) வீரவேங்கை யுனைதீன் (ஆண்) இயக்கப்பெயர் - நகுலன், ஊர் - அட்டாளைச்சேனை, காரைத்தீவு, அம்பாறை. வீரச்சாவு - 26-6-1988, நிகழ்வு - அம்பாறை அக்கரைப்பற்றில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவு.

11) வீரவேங்கை சம்சுதீன் நசீர் (ஆண்) இயக்கப் பெயர் - நசீர், ஊர் - ஒலுவில், அம்பாறை. வீரப்பிறப்பு - 19.2.1960, வீரச்சாவு 17-2-1989, நிகழ்வு - மட்டக்களப்பு நிந்தவூரில் ஈ.பி.ஆர்.எல்.எப்.கும்பலினால் பிடிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட கோரத்தாக்குதலில் வீரச்சாவு.

12) வீரவேங்கை ஜெமில் ஜெயாத் முகமது உசைதீன், (ஆண்), ஊர் - ஒட்டமாவடி, மட்டக்களப்பு, வீரப்பிறப்பு - 28-3-1968, வீரச்சாவு - 5-8-1989, நிகழ்வு - மட்டக்களப்பு மாவட்டம் ஒட்டமாவடியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவு.

13) வீரவேங்கை மீராசாகிபு காலிதீன், (ஆண்) நிலை - வீரவேங்கை, இயக்கப்பெயர் - சியாத், ஊர் - சாய்ந்தமருது, அம்பாறை. வீரப்பிறப்பு - 18-8-1972, வீரச்சாவு - 6-12-1989, நிகழ்வு - பழுகாமத்தில் ஈ.என்.டி.எல்.எப்.கும்பல் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவு.

14) இரண்டாம் லெப்டினனட் சாந்தன் நைனா முகைதீன் நியாஸ், (ஆண்) இயக்கப்பெயர் - சாந்தன், ஊர் - நிலாவெளி, திருகோணமலை. வீரப்பிறப்பு - 17-5-1972, வீரச்சாவு - 6-2-90, நிகழ்வு - திருகோணமலை மாவட்டம் ஜமாலியாப் பகுதியில் அமைந்திருந்த ஈ.என்.டி.எல்.எப்.கும்பலின் முகாமைத் தாக்கிவிட்டு தளம் திரும்பும்போது ஏற்பட்ட படகு விபத்தில் வீரச்சாவு.

15) வீரவேங்கை அகமட் றியாஸ், (ஆண்), இயக்கப்பெயர் - அலெக்ஸ், ஊர் - மருதமுனை, நீலாவணை, மட்டக்களப்பு. வீரப்பிறப்பு - 23-1-1970, வீரச்சாவு - 4-5-1990.

16) வீரவேங்கை அகமட் லெப்பை செப்லாதீன் (ஆண்), இயக்கப்பெயர் - சுந்தர் (சுந்தர்) ஊர் - வேப்பானைச்சேனை, அம்பாறை. வீரப்பிறப்பு - 25-2-1973, வீரச்சாவு - 25- 5- 1990.

17) வீரவேங்கை கமால் (ஆண்) ஊர் - மட்டக்களப்பு, வீரச்சாவு - 7-6-1990.

18) வீரவேங்கை முகைதீன் பாவா அன்சார் (ஆண்), இயக்கப்பெயர் - தாகீர், ஊர் - திருகோணமடு, பொலனறுவை. வீரப்பிறப்பு - 29-4-1972, வீரச்சாவு - 11-6-1990. நிகழ்வு - மட்டக்களப்பு கல்குடா பகுதியில் சிறிலங்கா படையினருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு.

19) வீரவேங்கை அலியார் முகமது சலீம் (ஆண்) இயக்கப்பெயர் - கபூர், ஊர் - காங்கேயன்ஓடை, மட்டக் களப்பு, வீரச்சாவு - 11-6-1990, நிகழ்வு - மட்டக்களப்பு களுவாங்சிக்குடிப் பகுதியில் வைத்த சிறிலங்கப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவு.

20) வீரவேங்கை கரீம் முஸ்தபா (ஆண்), இயக்கப்பெயர் - ஜெமில், ஊர் - மட்டக்களப்பு, வீரச்சாவு - 12-6-1990, நிகழ்வு - திருகோணமலை கும்புறுமூலைப் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கப் படைமுகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவு.

21) வீரவேங்கை இஸ்மாயில், (ஆண்) இயக்கப்பெயர் - தௌபீக், ஊர் - ஓட்டமாவடி, மட்டக்களப்பு. வீரச்சாவு - 12-6-1990, நிகழ்வு - திருகோணமலை கும்புறுமூலைப் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கப் படைமுகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவு.

22) வீரவேங்கை முகம்மது இலியாஸ், (ஆண்) இயக்கப்பெயர் - ஜிவ்றி, ஊர் - 4ஆம் வட்டாரம், மீராவோடை, வாழைச்சேனை, மட்டக்களப்பு. வீரப்பிறப்பு - 5-3-1974, வீரச்சாவு - 13-6-1990. நிகழ்வு - திருகோணமலை கும்புறு மூலையில் சிறிலங்கப் படையினருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு.

23) வீரவேங்கை அப்துல்காதர் சம்சி, (ஆண்) இயக்கப்பெயர் - தர்சன், வீரச்சாவு - 13-6-90.

24) வீரவேங்கை கச்சு முகமது அபுல்கசன் (ஆண்), இயக்கப்பெயர் கலையன், ஊர் - 1ஆம் வட்டாரம், புல்மோட்டை, திருகோணமலை. வீரச்சாவு - 14-6-1990, நிகழ்வு - சிறிலங்கப் படையினருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு.

25) வீரவேங்கை அன்வர் (ஆண்), வீரச்சாவு 15-6-1990, நிகழ்வு - பாணமையில் சிறிலங்கப்படையினர் விடுதலைப்புலிகளின் முகாமை முற்றுகையிட்டபோது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவு.

26) வீரவேங்கை ஆப்தீன் முகமட் யூசுப் (ஆண்), இயக்கப்பெயர் - ஜெகன், ஊர் - குச்சவெளி, திருகோணமலை, வீரப்பிறப்பு - 8-4-1972, வீரச்சாவு - 15-6-1990, நிகழ்வு - திருகோணமலை கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்கப் படையினருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு.

27) வீரவேங்கை குபீர், ஊர் : அக்கரைப்பற்று, அம்பாறை, வீரச்சாவு - 15-6-1990, நிகழ்வு - பாண மையில் சிறிலங்கப் படையினர் விடுதலைப் புலிகளின் முகாமை முற்றுகையிட்டபோது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவு.

28) வீரவேங்கை முகமது ரபீக், இயக்கப்பெயர் - ராவ், ஊர் - பொத்துவில், அம்பாறை, வீரச்சாவு - 15-6-1990, நிகழ்வு - லகுகலவில் சிறிலங்கப்படையினர் பதுங்கியி ருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவு.

29) வீரவேங்கை நியாஸ், ஊர் - மூதூர், திருகோ ணமலை, வீரச்சாவு - 17-6-1990. நிகழ்வு - மட்டக் களப்பில் சிறிலங்கா வான்படையின் உலங்கு வானூர்தி மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவு.

30) வீரவேங்கை முகமது இஸ்காக் கூப்சேக்அலி, இயக்கப்பெயர் - மஜீத், ஊர் - மீராவோடை, மட்டக்களப்பு, வீரச்சாவு - 18-6-1990, நிகழ்வு - வவுனியா வைரவ புளியங்குளம் பகுதியில் சிறிலங்கப் படையினருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு.

31) வீரவேங்கை லெப்பை தம்பி செய்னூர், இயக்கப்பெயர் ஜின்னா, ஊர் - ஓட்டமாவடி, வாழைச் சேனை, மட்டக்களப்பு, வீரப்பிறப்பு - 20-10-1970, வீரச்சாவு 19-6-1990, நிகழ்வு - அம்பாறை பொத்துவில் கொட்டுக்கலவில் பகுதியில் சிறிலங்காப் படையினர் பதுங்கி மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவு.

32) வீரவேங்கை முகமது ராசீக், இயக்கப்பெயர் - டேனியல், ஊர் - திருகோணமலை, வீரப்பிறப்பு - 23-6-70, வீரச்சாவு - 22-6-1990. நிகழ்வு - திருகோணமலை திருமலை 2ஆம் கட்ட பகுதியில் சிறிலங்கப் படையின ருடன் இடம்பெற்ற சமரில் வீரச்சாவு.

33) வீரவேங்கை அபுசாலி புகாரி, இயக்கப்பெயர் ஹனியா, ஊர் - அக்கரைப்பற்று, அம்பாறை, வீரச்சாவு - 15-7-1990.

34) வீரவேங்கை அப்துல் நசார், இயக்கப்பெயர் நிர்மல், ஊர் - புடவைக்கட்டு, திருகோணமலை, வீரப்பிறப்பு - 19-1-1972, வீரச்சாவு - 27-7-1990. நிகழ்வு - திருகோணமலை திருமலை திரியாயில் ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவு. ●



# சீரழிந்த சென்னை சாலைகள்





சென்னை, கிண்டி திரு.வி.க. தொழிற் பேட்டைக்குள் உள்ள சாலையில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக சாலையில் ஏற்பட்ட பள்ளம் சரிசெய்யப்பட வில்லை.

இருசக்கர வாகன ஓட்டிகள் பலர் அந்தப் பள்ளத்தில் விழுந்து, எழுந்து போவதைப் பார்த்த யாரோ ஒரு நல்ல மனிதர் வாகன ஓட்டிகளை எச்சரிப்ப தற்காக தெர்மாகோல் பெட்டியில் சிவப்பு வண்ணம் பூசி வைத்திருக் கிறார்.

இந்தச் சாலை, பேருந்துகள் போய் வருகிற சாலை. பல தொழிற் நிறுவ னங்களும் அரசுத் தொழில் நிறுவனங் களும் மேலாண்மை நிறுவனங்களும் இயங்குகின்ற முக்கியமானசாலை. இருந்தும் இந்தச்சாலை மாதக் கணக்கில் சாலை சரிசெய்யப்படாமல் இருப்பது அரசு இயந்திரத்தின் கவனக் குறைவையேகாட்டுகிறது. நடவடிக்கை எடுக்குமா அரசு?

**சைதை மணிமாறன்**




# தீர்ப்பு

ஒரு வீட்டில் இரண்டு வயது சிறுவன். கண்ணாடி டம்ளரை உடைத்து விட்டான். எல்லோரும் பதறி அடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள். உடைந்த கண்ணாடியினால் குழந்தைக்கு எந்த பாதிப்பும் இல்லையே என்று சந்தோஷப்பட்டார்கள். அதேபோல பன்னிரண்டு வயதுச் சிறுவன் கண்ணாடி டம்ளரை உடைத்து விட்டான். ஓடி வந்து பெற்றோர் அவனை அடித்தார்கள்.

42 வயதுள்ள ஒருவர் கண்ணாடி டம்ளரை உடைத்துவிட்டார். எல்லாரும் பார்த்தார்கள் ஒன்றும் சொல்லவில்லை. 62 வயதுள்ள ஒருவர் அதே போல் கண்ணாடி டம்ளரை உடைத்துவிட்டார். வீட்டில் உள்ளவர்கள் அவரைக் கண்டித்தார்கள். அமைதியாய் ஒரு இடத்தில் உட்கார வேண்டியதுதானே என்று கூறினார்கள்.

ஒரே விதமான சம்பவம் நான்கு வகையான தீர்ப்பு. இதுதான் சமுதாயத்தின் தீர்ப்பு. சட்டமோ 50 ரூபாய் திருடியவனையும் 5000 கோடி திருடியவனையும் ஒன்றாகவே பார்க்கிறது. இருவருக்கும் ஒரே மாதிரி தீர்ப்பு (தண்டனை) வழங்க நினைக்கிறது.

சட்டம்தான் நீதியைத் தீர்மானிக்கிறது. கீழ்க்கோர்ட் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப் பட்ட வரை உயர்நீதி மன்றம் குற்றவாளி இல்லை என்று தீர்ப்பளிக்கிறது. சட்டத்தில் ஏன் இந்த முரண்பாடு. நீதி ஒரே மாதிரிதானே இருக்க வேண்டும். ஏன் மாறு படுகிறது?

குற்றவாளி தண்டிக்கப்படாமல் இருக்கலாம். நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்பது தானே பொதுவான நீதி. இன்றைக்கு எத்தனை நிரபராதிகள் தண்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு ஏழைக்கும் பக்கத்து வீட்டு அரசு ஊழியருக்கும் பிரச்சினை. அரசு ஊழியர் அந்த ஏழையை அடித்து விட்டு தனது மோட்டார் சைக்கிளில் காவல் நிலையம் வந்து முன்புகார் கொடுத்து விடுகிறார். உண்மையாய் பாதிக்கப்பட்ட ஏழை, சைக்கிளில் வந்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கிறார். காவல் அதிகாரியோ ஏழையை குற்றவாளியாக்கி நீதிமன்றம் அனுப்புகிறார்.

பணம் பத்தும் செய்யும். இங்கே நீதி என்ன செய்கிறது, சட்டம் (மரச் சட்டம்) வளைந்தால் ஒன்றுக்கும் உதவாது. அதுபோல சட்டம் வளைந் தாலும் அது நீதிக்கு உதவாது. எத்தனை நியாயவாதிகள் தண்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கன்றுக் குட்டியைக் கொன்றதற்காக தன் மகனை தேர் ஏற்றிக் கொன்றான் மனுநீதிச் சோழன். இது கதையா? இல்லை நடந்ததா?

இன்றைய காலத்தில் அதை நினைத்துப் பார்த்தால் கற்பனையாகத் தெரிகிறது. சட்டம் நீதியைக் கொண்டு வரும். நீதியின்படி தீர்ப்பு இருக்கும். இதைத்தான் எல்லோரும் (மக்கள்) நம்புகிறோம், எதிர்பார்க்கி றோம். ஆனால் நடப்பதோ எதிர்மறையாக இருக்கி றது. போதைக்கு அடிமையாகாதே என்பது பொது வான தீர்ப்பு. சாராயக் கடையைத் திறப்பதற்காக நூற்றுக்கணக்கான காவலர்களை பாதுகாப்பாக வைத்து மக்களை விரட்டி அடிப்பது இன்றும் நடந்து கொண்டிருக்கிறது.

மக்கள் வாழும் இடத்தில் சாராயக்கடை வைக்க அரசு நினைத்திடும்போது எதிர்க்கும் மக்களுக்கும் எதிராகவே நீதி வழங்குவது சட்டத்தின் தீர்ப்பு. எது நீதி? சமூகத்தின் ஒட்டுமொத்த நம்பிக்கையா, சட்டத்தின் மூலம் வெளிப்படுத்தும் அரசின் செயல் பாடா, எது நீதி? என்று மக்கள் புலம்பிக் கொண்டே இருக்கிறார்கள். தராசுத் தட்டைத் தூக்கிக் கொண்டி ருக்கும் நீதி தேவதையை நீதி எது என்று கேட்டால் நான் கண்ணை மூடியிருக்கிறேன். எனக்கே தெரிய வில்லை என்கிறாள்.

மக்கள் வாழ்வுக்காகவும் தங்கள் நம்பிக்கைக்காகவும் (சமூக நீதி) போராடினால் சட்டத்தைக் கொண்டு ஒடுக்குவது நீதியாகுமா? அவர்களுக்கு எதிராய் வரும் தீர்ப்பு தீர்ப்பாகுமா?

தொடரும்...

**தங்க. மாணவன்**

# “ஆங்கிலேயர் ஆட்சி மீண்டும் வந்தால் மனப்பூர்வ மாகவரவேற்பேன்.” மகாத்மா காந்தியின் செயலாளர் கல்யாணம்

மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாள்விழா, மதுரை காந்தி மியூசியத்தில் நடைபெற்றது. இதில் மகாத்மாவின் செயலாளராக இருந்த திரு. கல்யாணம் அவர்கள் காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். பின்னர் அவர் காந்தி நினைவாக சிறப்பு தபால் தலைகண்காட்சியைதிறந்து வைத்து பேசினார்.

காந்தியடிகளின் ஆசிரமத்தில் இருந்த அனைவரும் அதிகாலை 3 மணிக்கெல்லாம் எழுந்து விட வேண்டும் எனபது விதி. எழுத்தவுடன் பிரார்த்தனை நடைபெறும், அது, அனைத்து மதங்களுக்கும் பொதுவான பிரார்த்தனையாகநடைபெறும்.

5 மணியளவில், தனக்கு வந்திருக்கும் கடிதங்களை வாசிக்கஎன்னிடம் சொல்வார். அவற்றைக் கேட்டு மிக மென்மையாகஅதற்கானபதில்களைச் சொல்வார். அதனை நான் எழுதுவேன். அதன்பிறகு அவற்றை அவர் திருத்துவார். எந்தஇடத்தில் திருத்தியிக்கிறார் என்பதைப் பார்த்து நாம் திருத்திக்கொள்ள வேண்டும் யாரையும் கோபித்துக் கொள்ளமாட்டார். யாரையும் கடிந்து பேச மாட்டார். அது அவரது கொள்கைக்கு விரோமாகநினைப்பார். பிறகு அவருக்காக காத்திருக்கும் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களைச் சந்தித்து உரையாடுவார். நம் நாட்டில் வாழும் ஏழைமக்களின் நலன்களைச் சுற்றியே அவரது சிந்தனையும், பேச்சும், செயலும் இருக்கும். ஒவ்வொரு திங்கட்கிழமையையும் மவுன விரதம் கடைபிடிப்பார். அந்த நேரத்தில் யாருடனும் பேசமாட்டார்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின்போது காந்தியைக் கொலை செய்வதற்கு 6 முறை முயற்சிகள்நடந்தன. அவர்கள்காப்பாற்றிக் கொடுத்த காந்தியை, நாடு விடுதலை பெற்றுஐந்தரைமாதங்களில் நாம் இழந்தோம். அப்போது நம்மால் கொடுக்க முடியாத நல்லாட்சியை, இன்று வரை கொடுக்க முடியவில்லை. அந்த வெள்ளைக்காரன் ஆட்சி மறுபடியும் வந்தால் இந்தியா நன்றாக இருக்கும்.

நீங்கள்தவறு செய்தீர்கள் என்றால் உடனடியாக தண்டனைகிடைக்கும் எனும் நிலை வெள்ளையர்களின் ஆட்சியில் இருந்தது. ஆங்கிலேய ஆட்சியின் போது லஞ்சம், ஊழலுக்கு ஒருபோதும் இடமில்லை. நம்மைக் கொள்ளையடித்தார்கள்என்பது வேறு. ஆனால், அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் கிம்பளம் வாங்கும் பழக்கமெல்லாம் அவர்களிடம் இல்லை. வெள்ளையர் ஆட்சி நடைமுறை, நிர்வாகத் திறமை குறித்து காந்தியேபலமுறை பாராட்டியிக் கிறார்.

காந்தியை சுத்தமாக மறந்துவிட்ட நாட்டில் காந்திக்கான தேவைஎப்படி இருக்கும்? காந்தியை இப்போதும் மதிப்பவர்கள் வெள்ளையர்கள்மட்டுமே, தெய்வத்தைப் போன்று வணங்குகிறார்கள். 3 ஆயிரம் ஆண்டுகளானாலும் இன்னொரு காந்தி நமக்கு கிடைக்க மாட்டார் என்றுஅவர்கள் நம்புகிறார்கள். இந்தியாவில் நடைபெற்ற முதல் 2 தேர்தல்களில் காந்தியின் பெயரைச் சொல்லி வாக்குகள் வாங்கினார்கள். இப்போது அப்படி இல்லை.

இன்றைக்கு ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்ய மீண்டும் இந்தியாவிற்கு வந்தால் அவர்களை மனப்பூர்வமாகவரவேற்பேன். காந்தி உயிரோடு இருந்திருந்தாலும் அதைத்தான் செய்திருப்பார். பாடுபட்டு உருவாக்கிய தேசத்தை ஊழலிலும், ஏழ்மையிலும் விட்டுச்செல்ல காந்தி விரும்பி இருப்பாரா?

சுதந்திர இந்திய ஆட்சியில் தான் முதன் முதலில் ஊழல் தொடங்கியது. இந்திய தேசத்தின் விடுதலைக்குப் பிறகு ஒருவேளை நேதாஜிதலைமையில் ஆட்சி அதிகாரம் அமைந்திருந்ததால், தற்போதைய அவலங்கள் இருந்திருக்காது. இந்தியா விடுதலை பெறும் போது நேதாஜிதலைமையிலான ஆட்சி முறை 5 ஆண்டுகளுக்கு அமைந்திருந்தால் இந்த நாட்டின் தலையெழுத்தே மாறியிருக்கும். ஜெனரல் கரியப்பாவும் இதே கருத்தைக் கொண்டருந்தார்.

●

உன் வாய்க்குள் நுழையும் தவறான பொருளால் உனக்கு நோய் மட்டும் வரும்! ஆனால், உன் வாயிலிருந்து வெளியேறும் தவறான சொற்களால் உனக்குப் பேரழிவே ஏற்படும்! – கன்பூசியஸ்.

படைப்பாளர்கள் என்போர் பயனுள்ள சிந்தனையாளராய், பகுத்தறிவுடன் சீர்தூக்கிப் பார்த்து, சமுதாயத்திற்கு நன்மை பயப்பனவற்றை மட்டுமே எழுத வேண்டும். இத்தகையோரே படைப்பளர் எனக் குறிக்கப் பெறுவர். டாக்டர் மு. வ. இத்தகைய படைப்பாளர்களுள் முதன்மையானவர்.

*– வண்டமிழ் வளர்த்த வரதராசனார் என்ற நூல் ஆசிரியர் முனைவர் அ. ஆறுமுகம்*

# கிருஷ்ணவேல் அவர்களின் நூல் வெளியீட்டு விழாவில்

## திரு. சுபவீ அவர்கள் ஆற்றிய உரை





உ.வே.சாவைப் பற்றி ஒரு பெரிய பிம்பம் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. அது முற்றிலும் பொய் என்று கிருஷ்ணவேல் இந்த புத்தகத்தில் சொல்கிறார். நான் இப்போதும் கூட அப்படிக் கருதவில்லை. அந்த பிம்பம் கொஞ்சம் மிகையானது என்பதில் எனக்கு கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் கிருஷ்ணவேல் சொல்வது போல முற்றிலும் அது ஒரு பொய்யான பிம்பம் என்றும் என்னால் கருதமுடியவில்லை. அவருக்குள் அந்த பார்ப்பனியச் சிந்தனைகள் சில இருந்திருக் கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் முற்றுமாக அவர் தமிழுக்கு எதுவுமே செய்யவில்லை என்கிற கூற்று மறுபடியும் ஆய்வுக்குரியதாகவே எனக்குப்படுகிறது. எனவே, நான் என்ன செய்தே னென்றால், எனக்கு கிருஷ்ணவேல்தான் நெருக்க மானவர், உ.வே.சா. அல்ல.

ஆனாலும், நாம் எதிரான கருத்துடையவர் என்று கருதுவது கூட, குற்றம் சாட்டும் போது மிக கவனமாக இருக்க வேண்டும் என்று கருதுகிறேன். யார் ஒருவரையும் புகழ்வதற்கு கூட சட்டென்று புகழ்ந்துவிடலாம். ஆனால் எதிர்ப் பதற்கும், மறுப்பதற்கும் நிறைய ஆதாரங்களை நாம் தேடி காட்டியாக வேண்டும்.

ஆதாரங்களை இந்த நூலில் கிருஷ்ணவேல் காட்டியிருக்கிறார் என்றாலும், இன்னமும் அவை ஆழ மாக சென்று ஆராயப்படவேண்டியவை என்றுதான் எனக்கு தோன்றுகிறது. நான் முதலில் மேலோட்ட மாக செய்தியைச் சொல்லிவிடுகிறேன், அதற்கு காரணம், உ.வே.சா. என்ற பெயர் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது, தமிழ் தாத்தா என்றும் தெரிந் திருக்கிறது. தமிழ் தாத்தாவை விட இந்திய தாத்தாவை ரொம்பப் பேருக்கு தெரியும். திரைப்படமென்றால் இந்திய தாத்தாதான் ஊழலை ஒழிப்பார். எனக்கு தமிழ் தாத்தாவுடனும் முழு உடன்பாடு இல்லை, இந்திய தாத்தாவுடனும் முழு உடன்பாடு இல்லை. அது வெறும் கற்பனை. அப்படி ஒரு கற்பனையை கட்டமைப்பதே உண்மைகளை மறைப்பது என்று நான் சொல்கிறேன்.

ஒரு தனிமனிதன் அனைத்தையும் மாற்றிவிடலாம் என்பதை போல காட்டுகிற அந்த திரைப்படக் கருத்துகள் உண்மைக்கு மாறானது. உ.வே.சாவையும் பற்றி அப்படித்தான், மிகக் கூடுதலாக பல செய்திகள்

சொல்லப்பட்டிருக்கிறது. நான் முதன் முதலாக உ.வே. சாவைப் பற்றிய ஒரு மாற்றுச் செய்தியை திரு.வி.க. அவர்களின் நூலில் தான் படித்தேன். திரு.வி.க. அவர்கள் ஒரு உண்மையைச் சொல்கிறார், இது ஒரு வரிசை, ஆறுமுகநாவலர் அவர்கள், சி.வே. தாமோதரன் பிள்ளை அவர்கள், உ.வே.சா, அதற்கு பிறகு வையாபுரி அவர்கள். இதிலே உ.வே.சாவை தெரிந்த அளவுக்கு அல்லது உ.வே.சா. சொல்லப்பட்ட அளவிற்கு, உண்மையாகவே அந்த துறையில் ஏராள மான நூல்களை பதிப்பித்த சி.வே.தாமோ தரன் பிள்ளை பற்றி கூறப்படவில்லை. அவருக்கும் முன்னால் ஈழத் தைச் சார்ந்த ஆறுமுகநாவலர். இதிலே திரு.வி.க. அவர்கள் எப்படி எழுதினார்கள் என்றால் பதிப்புத் துறை என்று எடுத்துக்கொண்டால் ஆறுமுக நாவலர் தான் அடித்தளமிட்டார், சி.வே.தாமோதரன் பிளைளை சுவர்களை எழுப்பினார், உ.வே.சா. கூரை வேய்ந்தார் என்று திரு.வி.க. அவர்கள் எழுதினார். கூரை வேய்ந்தவரை மட்டுமே எல்லோரும் சொல்லி யிருக்கிறார்கள், அடித்தளமிட்ட வரையும், சுவர் எழுப்பியவரையும் பற்றிச் சொல்லப்படவில்லை. இரண்டு மூன்று காரணங்கள் இருக்கலாம்.

ஆறுமுகநாவலர் அவர்களும், சி.வே. தாமோதரன் பிள்ளை அவர்களும் இரண்டு பேருமே ஈழத்தைச் சேர்ந்தவர். தமிழ் இலக்கியங்களில் கண்டெடுத்த தொல் காப்பியத்தைப் பதிப்பித்தவர்கள் தமிழ் நாட்டுகாரர்கள் இல்லை, ஈழத்தைச் சேர்ந்தவர்கள். உ.வே.சா. தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். இதில் மூன்று பேரும் மூன்று விதமான மதங்களைத் தழுவியவர்கள். முழுக்க முழுக்க சைவத்தை முன்னெடுத்தவர் ஆறுமுகநாவலர் அவர்கள், கிறிஸ்தவராகப் பிறந்து சைவராக மாறியவர் சி.வே.தாமோ தரன் பிள்ளை. ஒரு பார்ப்பனர் சமூகத்திலே கும்பகோணத்திற்கு அருகில் பாபநாசத்தில் பிறந்தவர் உ.வே.சா.

ஏன் நான் சி.வே.தாமோதரன் பிள் ளையை கிறிஸ்தவர் என்று கவனமாக குறிப்பிடுகிறேன் என்றால், நாம் சொல்ல வில்லையென்றால் எச்.ராஜா சொல்லுவார், அதைவிட நாமே சொல்லிவிடலாம். அவருடைய நூதனம் என்ன தெரியுமா? விஜயை, ஜோசப் விஜய் என்று கண்டுபிடித் தவர். எனவே சி.வே. தாமோதரன் பிள் ளையை யார் என்று அவர்கள் ஆராய்ச்சி செய்யும் சிரமம் அவர்களுக்கு வேண்டாம், பிறக்கிறபோது கிறிஸ்தவர், ஆனால் மிக விரைவிலேயே எப்படி அவர் மாற்றப் படுகிறார் என்றால் 1932ல் அவர் பிறக்கிறார், 1948ல் ஆறுமுகநாவலர் அவர்கள் ஒரு மிகப்பெரிய சைவ வித்தியாலயா என்கிற ஒரு பள்ளியை திறக்கிறார். அந்த பள்ளி தான் ஈழத்திலிருக்கிற பலரை சைவ மதத்திற்கு அழைத்து வந்தது.

இன்றைக்கு இந்த நூல் பற்றி பேசுகிற போது நான் அறிவேன், சுவையாகப் பேசமுடியாது. என் மனைவியை கூட்டத் திற்கு அழைத்த வந்தபோது, காரில் ஏறிய பிறகு சொன்னேன், இன்றைக்கு கூட்டம் கொஞ்சம் சுவையாக இருக்காது. ஏன் இதை முதலிலே சொல்லவில்லை என்றார்கள், சொன்னால் நீ வரமாட்டாய் என்பதால் தான் சொல்லவில்லை. ஏனென்றால் இந்த புத்தகம் சில ஆராய்ச்சி செய்திகளை உள்ளடக்கியது. நான் சுவையாகப் பேசுவது இந்தப் புத்தகத்திற்கு செய்கிற நியாயம் ஆகாது. எனவே 1948ல் அவர் தொடங்கிய அந்த சைவ வித்தியாலயா பள்ளி ஈழத்தில் சமய தடத்தில் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டுவந்தது. ஈழத்தமிழருடைய சமூகத்தை நாம் உள்வாங்கிக் கொள்ள வேண்டும், தமிழ்நாட்டுச் சமூகத்தைபோல, இந்துக்கள் என்கிற உணர்வு தாழ்வு என்ற மண் அங்கு இல்லை. ஆனால் சைவம் காலூன்றியது. அங்கே எல்லோரும் சைவர்கள். வைணவர்களை தேடிக்கூட கண்டுபிடிக்க முடியாது. மற்றபடி சாதியம் அங்கேயும் இருந்தது. இன்னும் சொன்னால் நம்மை விட அங்கே சாதியம் கூடுதலாகவே இருந்தது. இங்கு ஆதி திராவிடர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்வது போல, அங்கே துரும்பர்கள் என்று சிலர் அழைக்கப் பட்டார்கள். அதாவது துரும்பு மாதிரி மக்களை கருதுவது. ஓவியர் என்று அங்கே ஒரு ஜாதி இருக்கிறது, இங்கே இல்லாத ஜாதி ஓவியர் என்று பெயர். அவர்கள் கோவிலில் இருக்கிற பாத்திரங்களை யெல்லாம் பாதுகாக்கிற ஒரு இடைச்சாதி. இங்கே இருப்பது போல பார்ப்பனர்களின் ஆதிக்கம் ஈழத்தில் இல்லை. ஆனால் வெள்ளாளர்களின் ஆதிக்கம் மிகக் கூடுதலாக இருந்தது. வேளாளர்களென்றால் சைவ வேளாளர்கள். அவர்கள்தான் அங்கே எல்லோருக்கும் மேலான, அந்த சாதிய அடுக்கு நிலை என்கிறார்கள். இவையெல்லாம் நாம் சமூகத்தை உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக சொல்லுகிறேன்.

எப்படி உ.வே.சாவை பற்றிய விமர்சனம் நமக்கு இருக்கிறதோ, அதை போல ஆறுமுகநாவலர் அவர்களைப் பற்றிய விமர்சனம் இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். ஆறுமுகநாவலர் அவர்கள் தமிழுக்கு நிறையச் செய்தவர் என்பதை மறுக்க முடியாது. ஆனால் கடைசி வரையில் அந்த சாதிய உணர்வில் காலூன்றி நின்றவர். அவர் என்ன எழுதிகின்றார் என்றால், வெளியில் போகிற போது ஒரு தாழ்த்தப்பட்டவரைப் பார்த்தால் வீட்டுக்கு வந்தவுடன் உடுத்தியிருந்த ஆடைகளோடு குளித்துவிட வேண்டுமென்று. அந்த ஆடைகளைக் கூட களையக் கூடாது, அந்த ஆடையில் கூட தீட்டுப்பட்டுவிடும், உடுத்தியிருக்கிற ஆடைகளோடு குளித்துவிட வேண்டும் என்று சொல்கிறார். அந்த அளவிற்கு ஒரு சாதியம் அவருக்குள் காலூன்றி நின்றது. ஆனால் அவருடைய தமிழ்த் தொண்டை நான் மறுக்கவில்லை. அது இன்னொரு பக்கம் இருக்கட்டும்.

சி.வே.தாமோதரன் பிள்ளை அவர்கள்தான் இத்தனை சமய தாக்கங்கள் இல்லாமலேயே நிறைய நூல்களை பதிப்பித்தி

ருக்கிறார். உண்மையாக தமிழில் கூடுதலாக நூல்களை பதிப்பித்தவர் சி.வே.தாமோதரன் பிள்ளை. அவருக்கு அடுத்து வந்தவர்தான் உ.வே.சா. அவர்கள். உ.வே. சாவுக்கு கிடைத்த விளம்பரம், உ.வே.சாவுக்கு கிடைத்த அறிமுகம், சி.வே. தாமோதரன் பிள்ளைக்கு தமிழ் நாட்டில் கிடைக்கவில்லை. அதற்கு காரணம், ஒன்று அவர் ஈழத்தைச் சார்ந்தவர் என்பதால் இருக்கலாம், அல்லது உ.வே.சாவுக்கு மட்டுமே இருக்கிற தகுதி மற்றவர்களுக்கு இல்லை என்பதாக இருக்கலாம். அந்தத் தகுதி என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகையினால், இதிலே கிருஷ்ணவேல் என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால், உ.வே.சா. அவர்கள் முறைப்படி படித்தவர் இல்லை. ஆனால் மாநில கல்லூரி வரையில் அவர் பேராசியராக இருந்தார். இவையெல்லாம் அவருக்கு இருந்த சாதிய செல்வாக்கி னால் கிடைத்தது என்கிறார்.

எனக்கு கொஞ்சம் வேறுபாடுகள் உண்டு .பள்ளி, கல்லூரியில் படிக்கும் படிப்பு மட்டும் தான் படிப்பு என்று நான் கருதவில்லை. அது பெரியாருக்கு பொருந்துமென்றால் உ.வே.சாவுக்கும் பொருந்தும். பெரியார் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்க வில்லை, அவரை சிந்தனையாளர் என்று ஏற்கிறோம். உ.வே.சாவினுடைய புலமை அவருடைய சிந்தனை என்பது பழமை பற்றுடையது. உ.வே.சா. முழுக்க முழுக்க பழமைப் பற்றுடையவர். ஆனால், அவருடைய புலமையை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. காரணம் அவர் எழுதியிருக்கிற கட்டுரைகளை படிக்கிறபோது தெரிந்தது. அந்தக் கட்டுரைகளில் ஒரு செவ்வியல் சொல்லுகிற அளவிற்கு புலமை வாய்ந்த கட்டுரைகள் இருக்கின்றது. இருப்பினும் கூட உ.வே.சா.அவர்கள் 1941ல் செந்தமிழ் செல்வி என்று எழுதிய கட்டுரையை, என்னுடைய நூலில் 2005 ஆம் ஆண்டு வெளியான என்னுடைய பெரியார் இடதுசாரி தமிழ் அமைப்பு என்ற நூலில் நானே குறிப்பிட்டிருக் கிறேன். உ.வே.சா. என்ன எழுதுகிறார் என்றால், தமிழ் மொழியைக்கூட யாரிடத்தில் எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். ஒரு பிராமணரை பார்க்கும் போது, போஜனம் ஆயிற்றா என்று கேட்க வேண்டும். அதையே ஒரு வேலைக்காரனைப் பார்த்து அப்படி கேட்கக் கூடாது. சோறு தின்றாயா என்று கேட்க வேண்டும் அது தான் தமிழ் என்று அவர் எழுதுகிறார்.

உணவுக்கான சொல்லில் கூட அவர் சாப்பிடுவது போஜனம், இவர் சாப்பிடுவது சோறு. சோறு என்பதுதான் தமிழ்ச் சொல். இன்றைக்கும் நாம் பல இடங்களில் சாதம் என்று சொல்லுகிறோம். அது தமிழ்ச் சொல் இல்லை, இன்னும் பல பேர் ரைஸ் இருக்கா என்று கேட்கிறார்கள், ரைஸ் என்றால் அரிசிதான். ஒரு இலையில் ஒரு கரண்டியில் அரிசியை வைத்ததற்கு பிறகு அதை கேட்பதை நிறுத்திவிடக் கூடும். சோறு என்பது தான் தமிழ்ச் சொல், சோறு என்கிற தமிழ்ச் சொல் ஒடுக்கப்பட்ட மக்களின் சொல்லாக ஆகிவிட்டது. படித்தவர்கள் சோறு என்று சொல்வதில்லை .சோறு வேண்டும் என்றாலே, என்னமோ பிச்சை கேட்பது போல, ஒரு தொனியை இங்கே உருவாக்கிவிட்டார்கள். இதுவே ஒரு வேலைக் காரனைப் பார்த்து சோறு தின்றாயா என்றுதான் கேட்க வேண்டும், ஒரு மகாணைப் பார்க்கும்போது போஜனம் ஆயிற்றா என்று கேட்க வேண்டும் என்று சொல்கிறார். தமிழிலே சாதி தான் அங்கே இருக்கிறது, வருணம் தான் இருக்கிறது. சூத்திரர்களுக்கு ஒரு மொழி என்கிற நிலைமைதான் இருக்கிறது. இப்படிப் பட்ட குறைபாடுகள் உ.வே. சாவிடம் இருக்கின்றன என்பது உண்மைதான்.

அவருடைய சொந்த ஊரான உத்தமதானபுரம் என்கிற ஊர் எப்படி வந்தது என்பதை என் சரித்திரம் என்ற நூலில் அவர் எழுதியிருக்கிறார். அதை என்னைப் போன்றவர்கள் பல கூட்டங்களில் பார்த்தீர் களா எப்படி பொதுச்சொத்து தனிச்சொத்தாக மாற்றப் பட்டிருக்கிறது என்று பேசியிருக்கிறோம். ஆனால் கிருஷ்ணவேல் அதையே மறுக்கிறார். இது உ.வே.சா. கட்டியெழுப்பிய கதை என்கிறார். அதற்கு ஒரு எடுத்துக்காட்டு வேண்டுமில்லையா, ஒரு கூற்றை மறுக்க வேண்டுமென்றால், உ.வே.சா. சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னால், அந்த சுமார் என்கிற சொல்லுக்கு அந்த இடத்தில் கூடுதல் மதிப்பு உண்டு என்று நான் கருதுகிறேன். கிருஷ்ணவேல் சரியாக 200 ஆண்டுகளைக் கழிக்கிறார். 1700 என்று வருகிறது. ஆனால் 1674ஆம் ஆண்டிலேயே தஞ்சை மராத்தி யர்களின் ஆட்சிக்காலம் முடிந்து போயிற்று. அதற்குப் பிறகு எங்கே எந்த மன்னன் வந்தான், எப்போது அந்த நிகழ்ச்சி நடந்தது, அதற்கான கல்வெட்டு, செப்பேடு உண்டா என்று கிருஷ்ணவேல் கேட்கிறார். ஆனால் கிருஷ்ணவேல் அவர்களின் கருத்தினை மறுப்பதற்கு காரணம், மேலும் இந்த ஆய்வு ஆழமாக்கப்பட வேண்டும்.

நாம் நம்முடைய கருத்தில் முன் முடிவுகளிலிருந்து எந்த ஒன்றையும் சொல்லிவிடக் கூடாது, அதனை மேலும் ஆராய்ச்சி செய்ய வேண்டும். சுமார் 200 என்றால் அது 225ஆக இருக்கக்கூடாதா, அதை மிகச் சரியாக 200 என்று கணித்து, அப்போது மன்னர்களின் ஆட்சி இல்லை என்று சொல்லுவதை ஒரு ஆழமான ஆய்வு என்று கொள்ள இயலவில்லை. இரண்டாவதாக கல்வெட்டுகளும், செப்பேடுகளும் எல்லாவற்றிற்கும் இருக்கின்றன என்று சொல்ல முடியாது. இருக்கின்ற கல்வெட்டு, செப்பேடு களெல்லாம் கிடைத்துவிட்டன என்றும் சொல்ல முடியாது. கல்வேட்டுகள், செப் பேடுகள் இருந்தாலும் அதனாலேயே அது உண்மை என்றும் எடுத்துக் கொள்ள முடியாது, ஏனென்றால் நம்முடைய செப்பேடுகளில், ஒருமுறை நேரில் பார்த்த போதுதான் வியந்துபோனேன். என்னைப் பொறுத்த வரையில் செப்பேடு என்றால், என் மூளையில்

பதிந்திருப்பது தோற்றம் எப்படி என்றால், ஒரு ஓலைச்சுவடி போல செப்பேட்டில் எழுதியிருக்கும் என்று கருதினேன். நான் செப்பேட்டை நேரில் தஞ்சை தமிழக பல்கலைக் கழகத்தில் பார்த்தபோது தான் வியந்து போனேன். அது கையளவில் அடங்குகிற ஒரு ஏடு அல்ல, அங்கிருந்து இங்கு வரை நீளுகிற பெரிய தகடு. அதாவது ஒரு பதினைந்து அடிக்கு நீளம் இருக்கிற ஒரு பெரிய தகடு. அவ்வளவு பெரியதாக செப்பேடுகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

அந்தச் செப்பேடுகள் பூமியில் பல புதைந்து போயின. எல்லாச் செப்பேடுகளும் கிடைக்கவில்லை, எல்லாக் கல்வெட்டுகளும் கிடைக்கவில்லை. கிடைத்த செப்பேடுகளில் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருக் கின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடந்த போரில் இவன் வென்றான் என்று, ஒரு செப்பேடு சொல்கிறது. அதே காலத்தில் அதே போரில் அவன் வென்றான் என்று இன்னொரு செப்பேடு சொல்கிறது. தோற்று ஓடிப்போனவனும் போகிற போது செப்பேட்டினை புதைத்துவிட்டு போயிருக்கலாம். யார் எது உண்மை என்பதை நம்மால் கண்டறிய முடியவில்லை, கண்டறிய வேண்டும். எனவே, இதுபோன்ற ஆய்வுகளை எதற்காக நாம் மீண்டும் துவங்க வேண்டுமென்று சொல்கிறேன் என்றால், கிருஷ்ணவேல் நிறைய படித்திருக்கிறார். நிறையச் செய்திகளை நுட்பமாக சொல்லுகிறார். உங்கள் ஆய்வுகளை எதிரிகள் எளிமையாக தகர்த்துவிட கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

ஒரு வேளை இந்த புத்தகம் வருவதற்கு முன்னால் என்னிடம் கொடுத்திருந்தீர்களானால் இன்னும் இரண்டு மூன்று ஆய்வாளர்களை நீங்கள் சந்திக்க வேண்டுமென்று கூட நான் சொல்லியிருப்பேன். குறிப்பாக நண்பர் ஆய்வாளர் வேங்கடாச்சலபதி அவர்கள் நிறைய ஆய்வுகளை செய்திருக்கிறார். இப்போது உ.வே.சாவினுடைய கடிதங்கள் அனைத் தையும் தொகுத்து ஒரு நூலாக வெளியிடுகிறார். இன்னும் சரியாகச் சொன்னால் ஆய்வாளர் சரவணனுடைய உழைப்பு இந்தத் துறையில் மிகவும் ஆழமானது. நான் வருகிற போது சரவணனோடு பேசிவிட்டு தான் வந்தேன். இப்படி ஒரு நூல் வெளியிட்டு விழாவிற்குச் செல்கிறேன். ஒரு ஆய்வா ளர் என்கிற முறையில் இந்தக் கருத்துகளைப் பற்றி என்ன கருதுகிறீர்கள் என்று கேட்டேன். ஏனென்றால் அவர் உ.வே.சாவைப் பற்றி மிக விரிவாக ஒரு நூல் தந்திருக்கின்றார், சாமிநாதம் என்பது அதற்குப் பெயர். எப்படி திருக்குறளை வள்ளுவம் என்று சொல்கி றோமோ அதுபோல உ.வே.சாவினுடைய படைப்பு களை, ஆய்வுகளை பற்றி சாமிநாதம் என்று அவர் எழுதியிருக்கிறார்.

அடுத்தது சி.வே.தாமோதரன் பிள்ளையைப் பற்றி தாமோதரம் என்ற ஒரு நூலை எழுதியிருக்கிறார். நான் சாமிநாதம் படித்ததில்லை, தாமோதரம் படித் திருக்கிறேன். அதில் உ.வே.சாவைப் பற்றிய குறிப்பு களும் இருக்கின்றன. அவரைப் பொறுத்தவரையில் உ.வே.சா மீது அவருக்கு நல்ல கருத்து எண்ணம் இருக்கிறது, சில குறைபாடுகளும் உண்டு என்பதை ஏற்கிறார். ஆனாலும் நீங்கள் இந்தப் புத்தகத்தில் இருப்பதாகச் சொல்லுகிற இந்த அளவுக்கு செய்திகள் என்னால் ஏற்கமுடியவில்லை என்றுதான் அவர் குறிப்பிடுகிறார். ஆனாலும் நான் ஆய்வாளர் சரவணனிடத்திலே ஒரு கேள்வியைக் கேட்டேன். கிருஷ்ணவேல் திரும்பத் திரும்ப தன்னுடைய பழைய புத்தகத்திலிருந்து கேள்வி எழுப்புகிறார். அது எப்படி திருமுருகாற்றுப் படை சங்க இலக்கியத்திலும் இடம்பெறுகிறது, ஒன்பதாம் திருமுறையிலும் இடம் பெறுகிறது. இது ஒரு மிகப் பெரிய இலக்கிய ஆய்வு. இதனை உண்மையாக கிருஷ்ணவேல் அவர்கள் இந்த நூலை எங்கு வெளியிட்டிருக்க வேண்டுமென்றால் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் போன்ற ஆய்வு நிறுவனங்களில் வெளியிட்டு இது பற்றிய விவாதங் களை அவர் வைத்திருக்க வேண்டும்.

திருமுருகாற்றுப் படை திருமுறையில் வருகின்றது என்றால் அது பத்து பதினோராம் நூற்றாண்டு, ஒன்பதாம் திருமுறையில் இருக்கிறது. சங்க இலக்கியத்தில் பத்து பாட்டில் முதல்நூலாக திருமுருகாற்றுப்படை இருக்கிறது. 'முருகு பெருநாறு மாநிற முல்லை பெருகு வட மதுரைக் காஞ்சி என்று தொடங்குகிற பாடலைக் காட்டி அந்த முருகு என்ற முதல் சொல்லை திருமுருகாற்றுப் படை குறிக்கிறது என்றார்கள், அதிலெல்லாம் கருத்து வெறுபாடுகள் இருக்கின்றன. முருகு என்ற சொல் திருமுருகாற்றுப் படையைத் தான் குறிக்கிறதா, அல்லது வேறு ஒரு நூலா என்கிற கேள்வி இருக்கிறது. அதேபோல, பதினென்கீழ் கணக்கு நூல்களில் கூட, அந்த பதினெட்டு நூல்களை வரிசைப்படுத்துகிற போது முப்பால் என்று வருவதை திருக்குறள் என்று நாம் சொல்லுகிறோம். அது திருக்குறள்தானா அல்லது முப்பால் என்ற வேறொரு நூல் என்பதான ஆய்வுகளெல்லாம் இன்னமும் நிறைவு பெறாமலே இருக்கிறது. எனவே திருமுருகாற்றுப்படையில் இன்னொரு செய்தி என்ன என்றால், உ.வே.சாவி னுடைய கருத்திலிருந்து நான் சொல்லுகிறேன், இதையும் கிருஷ்ணவேல் அவர்கள் எடுத்துக்கொண்டு தேடலாம். உ.வே.சாவே சொல்லுகிறார் திருமுருகாற்றுப்படை படித்த போதுதான் பரிபாடல் என்ற ஒரு நூல் இருந்திருக் கிறது என நான் அறிந்தேன். பரிபாடல் என்கிற நூலில் அதையும் உ.வே.சா தான் தொகுத்திருக்கிறார். மிகச்சரியாக கிருஷ்ணவேல் செய்திருக்கிற மிக அரியதொரு கண்டுபிடித்தல் அல்லது அதனுடைய பார்வை என்னவென்றால் ,உ.வே.சா ஏராளமான நூல்களை தந்திருக்கிறார்கள் என்றால், அந்த நூல்கள் எவை எவை எந்ததெந்த துறை சார்ந்தவை என்று மிகச் சரியாக பட்டியலிட்டிருக்கிறார்.

மொத்தம் 96 நூல்களை உ.வே.சா. பதிப்பித் திருக்கிறார், அதில் 60 நூல்கள் சிற்றிலக்கியங்கள் என்று சொல்லப்படுகிற தலப்புராணங்கள். வெறு மனே பக்தி இலக்கியங்கள். மிகப்பெரும்பான்மையாக வராமல் இருந்திருந்தால் நல்லவை என்று எங்களைப் போன்றவர்கள் கருதுகின்ற நூல்கள் தான். வெறும் ஒன்பது நூல்கள் மட்டுமே பழைய சங்க இலக்கியம் சார்ந்தவை. பத்துப்பாட்டு முழுமையாக உரையோடு அவரும் பதிப்பித்திருக்கிறார். எட்டுத்தொகையில் நான்கு நூல்களை அவர் பதிப்பித்திருக்கிறார் .புறநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பரிபாடல், அதில் பரிபாடலும் இருக்கிறது அதற்காகச் சொல் கிறேன். பிறகு காப்பியங்களில் ஐந்து காப்பியங்களில் மூன்று காப்பியங்களை அவர்தான் பதிப்பித்திருக் கிறார். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, சீவக சிந்தாமணிதான் 1887ல் முதலில் அவர் பதிப் பித்தது.

இன்னொரு பெரிய செய்தி என்னவென்றால் உ.வே.சா எழுதியிருப்பதை நான் சொல்கிறேன். கிருஷ்ணவேல் அதையெல்லாம் படித்திருப்பார். குண்டலகேசி என்னிடம் இருந்தும், அதை நான் தவறவிட்டுவிட்டேன், பதிப்பிக்கவில்லை என்கிறார். கவனமான ஒரு செய்தி ஏனென்றால் வேற்று மதம் சார்ந்த ஒரு காப்பியம் அது. குண்டலகேசியினுடைய ஓலைச்சுவடிகள் என் கைவசம் இருந்தும் தவறவிட்டு விட்டேன் பதிப்பிக்கவில்லை என்கிறார். இவையெல் லாம் பெரிய ஆய்வுக்குரியவை இன்றைக்கு வரை வளையாபதியும், குண்டலகேசியும் கிடைக்கவில்லை.

சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை பதிப்பிற்கு கொடுத்ததற்காக நாம் நன்றி சொல்லித் தானே ஆகவேண்டும். ஐம்பெருங்காப்பியங்களில் மூன்று காப்பியங்களை அவர்தான் பதிப்பித்தார். திருமுருகாற்றுப்படையை படிக்கிறபோதுதான் பரிபாடல் என்ற நூல் இருந்தது எனக்கு தெரியும் என்கிறார் இதிலிருந்து என்ன ஆய்வு குறிப்பு என்றால், மிகத் தெளிவாக திருமுருகாற்றுப்படைக்கு முந்தியது பரிபாடல். அது முந்திய நூலாக இருந்தால் தானே திருமுருகாற்றப்படையை எழுத முடியும். பரிபாடலே காலத்தால் பிந்தியது. சங்க இலக்கியங்கள் கி.மு.1 லிருந்து கி.பி 3வரைக்கும் ஆன காலங்களில் எழுதப்பட்டவையென்றால், கி.பி.மூன்றாவது நூற்றாண்டில் வெளிவந்த இக்கால இலக்கியம் தான் பரிபாடல். கலித்தொகையும், பரிபாடலும் தான் இலக்கியத்தில் பிந்தியது. எனவே பரிபாடலே மூன்றாம் நூற்றாண்டு, அதற்கு பின்னால் திரு முருகாற்றுப்படை வந்திருக்கிறதென்றால் அதை ஏன் சங்க இலக்கியத்தில் சேர்த்தீர்கள். சங்க இலக்கியத்தில் சேர்த்தது யார். உ.வே.சா தான் அதை தந்திரமாக செய்துவிட்டார் என்று கிருஷ்ணவேல் சொல்லுகிறார்.

ஆய்வாளர் சரவணன் சொல்கிறார். யார் சேர்த்தார்கள் என்பதற்கான சான்று கிடைக்கவில்லை. ஆனால் திருமுருகாற்றுப்படை எப்படியோ முந்திக் கொண்டு, பத்துப்பாட்டினுடைய முதல் இலக்கியமாக வருகிறது. இதுல எது சிக்கல்னா, பொதுவாக மக்கள் கருதலாம் அது சங்க இலக்கியமாக இருந்தால் என்ன? திருமுறையில் இருந்தால் என்ன? உங்களுக்கெல்லாம் வேலை இல்லையாடா. வேற எதையாவது செய்துட்டு போகவேண்டியது தானே, இதை ஏன் ஆராய்ச்சி செய்கிறீர்கள். நான் இலக்கியத்திற்காகவும், ஆய்விற் காகவும் மட்டும் இதைப் பேசவில்லை. இது சமூக அரசியலோடு தொடர்புடையது என்பதால் பேசு கிறேன்.

திருமுருகாற்றுப்படையில் வள்ளி என்ற ஒரு பாத்திரம் தான் இருக்கிறது. தெய்வானை இல்லை. ஆனால் பின்னால் என்ன செய்திருக்கிறார் என்றால், தெய்வானை தான் மனைவி, வள்ளியை முருகன் பிறகு சேர்த்து கொண்டார். 497 வது பிரிவு நீக்கப்படுகிற வரையில் அது குற்றம். அந்தப் பிரிவு நீக்கப்பட்ட பிறகு, திருமணமான இன்னொரு பெண்ணோடு உறவு இருக்குமானால் அது குற்றமில்லை, அதில் கிரிமினல் குற்றமில்லை என்று சொல்லியிருக்கிறது. ஆண்கள் பலர் மகிழ்கிறார்கள், அப்படி மகிழ வேண்டிய தேவை இல்லை. காரணம் ஒன்றாக, மகிழ்ச்சியாக இருக்கிற கணவன் மனைவி எல்லோருமே, வேறு ஒருவரை திருமணம் செய்துகொண்டால், அல்லது காதலித்தால் தண்டனைக் கொடுத்துவிடுவார்கள் என்பதற்காக சேர்ந்திருப்பது என்பதற்காக நாம் சொல்லக்கூடாது. அது நம்முடைய அன்பு உறவைப் பற்றியது. வேறொரு பெண்ணோடு அல்லது ஆணோடு தொடர்பு கொண்டால் தண்டனை கிடையாது என்று சொன்னவுடனே, எல்லோரும் நாளைக்கு காலையில் வேறொரு ஆணோடும், பெண்ணோடும் ஓடிவிடப் போகப் போகிறார்களா என்ன? அன்புதான் நம்மை இணைக்க வேண்டும். இன்றைக்கு காலையில் கூட ஓசோவுடைய செய்தியை நான் எடுத்து சொல்லி யிருந்தேன். ஓசோடைய கருத்துகளில் எந்த முரண் பாடும் எனக்கு இல்லை. இதைப் பற்றிச் சொல்லு கிறபோது அவர் ஒரு தெளிவாக சொல்லியிருக்கிறார், காமம் என்பது காதல் வயப்பட்டதாக இருக்க வேண்டுமென்பதைவிட சட்டத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும். சட்டத்தின் அடிப்படையில் தான் காலையில் ஒரு விவாதத்தை நான் பார்த்தேன், ஒரு நண்பர் சொல்கிறார், பிடிக்குதோ இல்லையோ திருமணம் ஆயிட்டா சேர்ந்து வாழனுங்கறது தலையெழுத்து, தலையெழுத்துன்னு சொல்லு கிறபோதே, அந்த வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பது எனக்கு தெரிகிறது.

அன்பும், நேசமும், இருவரையும் பிணைத்து வைக்க வேண்டுமே தவிர, சட்டமும் தலையெழுத்தும் இல்லை. அப்படி சட்டமும் தலையெழுத்தும் பிணைத்து வைத்திருந்தால் அந்த வாழ்க்கை உண்மையானதாக இருக்க வாய்ப்பில்லை. ஆனால், நம்முடைய ஊடகங்கள் உட்பட இதனை எப்படி

எழுதுகிறார்கள் என்றால், கள்ளக்காதலுக்கு உச்சநீதி மன்றம் அனுமதி. எவ்வளவு எளிமையாக செய்திகள் சொல்லப்படுகின்றன பாருங்கள். நான் சொன்னேன் கள்ளக் காதலுக்கு சரி, இதை யாராவது ஆங்கிலம் தெரிந்தவர்கள் நண்பர்களிடம் மொழி பெயர்க்கச் சொல்லுங்களென்றால், ஆங்கிலத்தில் கள்ளக்காதலை மொழிக்பெயர்ப்பது எப்படி என்று எனக்கு தெரியவில்லை. டாக்டர்கள் தான் சொல்லவேண்டும். காரணம் என்னவென்றால், அவர்கள் அப்படி யெல்லாம், பார்ப்பதாய் நான் நினைக்கவில்லை.

காதல் என்பது ஒன்றுதான், அதில் என்ன நல்ல காதல், கள்ளக்காதல். அப்படியானால் இது என்ன? திருமணம் கடந்த ஒரு உறவு, திருமணம் என்கிற ஒரு ஒப்பந்தத்திற்கு உட்பட்டவர்களுக்குள் இருக்கிற காதல். திருமணம் கடந்தவர்களுடைய காதல் கள்ளக்காதல், திருட்டுக்காதல், திருட்டுத்தாலி கட்டிக்கொள்வது, இதையெல்லாம் நம்மிடத்தில் வெவ்வேறு விதமான சொற்கள் இருக்கின்றன. கேட்டால் இவையெல்லாம் பண்பாடு என்று சொல் கிறார்கள். இந்த சொற்களே பண்பாட்டு அடிப்படை யில் அமையவில்லை. சொல்லே பண்பாட்டில் இல்லை. இப்புறம் எப்படி செயலிலே பண்பாடுடையதாக இருக்கும்.

எனவே அதற்குள் நான் போகவில்லை, முருகன் பட்டியலிலிருந்து இந்த கிரிமினல் வழக்கு வர வேண்டியதாயிற்று. இன்றைக்கு பாலியல் தொடர் பான அடுத்தடுத்து தீர்ப்புகள் பல வந்துகொண் டிருக்கின்றன. ஒரு பிரிவு நீக்கப்பட்டிருக்கிறது. தன் பாலின ஈர்ப்பு இரண்டு ஆண்களோ, இரண்டு பெண்களோ சேர்ந்து வாழ விரும்பினால், அது கிரிமினல் குற்றமில்லை என்று உச்சநீதிமன்றம் சொல்லியிருக்கிறது. அது எப்படி தவறு இல்லையென் றால், நாம் யார் முடிவு செய்வதற்கு, அவரவர்கள் முடிவு செய்யும் உரிமையை இந்த சமூகம் வழங்க வேண்டும், என்ற எண்ணத்தை நோக்கி நாம் நகர்கிறோம்.

ஒன்றை நான் தெளிவாகச் சொல்கிறேன், குடும்பம் பற்றியிருந்த மதிப்பீடுகள் காலப்போக்கில் மாறிக் கொண்டிருக்கின்றன, மாறும், மாறுவதுதான் இயல்பு. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலை இன்றைக்கு இல்லை. இன்னும் இருபது ஆண்டுகளில் பெரிய மாற்றங்களை பெறும் என்று காலையிலே ஓவியா அவர்கள் சொன்னார்கள், அதுதான் உண்மை யும் கூட. இப்போது பல்வேறு விதமான சிந்தனைகள் வெளிவந்திருக்கின்றன. திருமணமே இல்லாமல் சேர்ந்து வாழ்வது என்ற புதிய சிந்தனை. உடனடியாக ஒரு சமூகத்தில் சட்டென்று ஏற்றுகொள்ள முடியாது. ஆனால் எதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்றால், ஒரு மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்ளவேண்டும். ஒரு வேளை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே இந்த சிந்தனைகள் இருந்துதான் கடவுளர்கள் என்று சொல்லப் பட்டவர்கள் கூட இரண்டு மனைவியர் போன்ற சிந்தனைகள் அல்லது அந்த கற்பிதங்கள் நிகழ்ந்திருக் கின்றனவா என்பதையும் ஆராய வேண்டும்.

ஆனால் இன்னொன்றையும் நீங்கள் கவனமாகப் பார்க்க வேண்டும், பல ஆண் தெய்வங்களுக்கு இரண்டு மனைவியர் உண்டு. கண்ணனின் மனைவியர்களின் எண்ணிக்கையே தெரியவில்லை. சரியாக அந்த கணக்கு தெரிந்தவர்கள் இருக்கிறீர்கள் என்று எங்களுக்கு தெளிவாகத் தெரியும். ஆயிரக்கணக்கில் மனைவியர்கள் எல்லோரையும் விட்டுவிட்டு கடைசியில் ராதையிடம் தான் கண்ணனின் மனம் சென்றது. எதை கவனிக்க வேண்டுமென்றால், எந்த வொரு பெண் கடவுளுக்கும் இரண்டு கணவன் மார்கள், இரண்டு ஆண்கள் புராணங்களில் இல்லை. முருகனை எல்லோரும் வழிபடுகிறீர்கள், பாமா ருக்மணியை திரைப்பட பாடல் வரைக்கும் கொண்டு வருகிறது. இதை நியாயப்படுத்துவதற்கு கடவுளர்களை காட்டுகிற யாரும், ஏன் பாமாவிற்கு இரண்டு கணவர்கள் இல்லை, ஏன் வள்ளிக்கு இரண்டு கணவர்கள் இல்லை என்று கேட்கவில்லை.

எந்த பெண் தெய்வத்திற்கும் இரண்டு கணவர்கள் கிடையாது. இது ஒரு ஆணாதிக்கச் சமூகத்திலிருந்து வெளிப்பட்ட காரணத்தால், எல்லாம் ஆண் சிந்தனை யோடு வெளிப்படுத்தப்பட்டது. நேற்றைக்கு முன்தினம் மயிலாடுதுறையில் பேசுகிறபோது நான் கேட்டேன், பல குடும்பங்களில் மாமியாருக்கும், மருமகளுக்கும் இடையே சண்டை வருகிறது, ஏன் மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையே சண்டை வருவதில்லை? ரெண்டு பேரையும் ஒரே வீட்டில் வாழ வையுங்கள், சண்டை வருதா வரலையா பாருங்க. இரண்டு பேரும் ஒரே வீட்டில் வாழவில்லை. ஒரு பெண்ணுக்கு திருமணத்தின்போது நிகழ்த்துகிற வன்முறை இருக்கிறதே அது இந்த சமூகத்திற்கு கொடுமையாகும்.

திருமணம் முடிந்தவுடனே ஒரு செடியை வேரோடு பிடுங்கி, இன்னொரு இடத்தில் நடுவது வன்முறை இல்லையா. அதற்கு அப்புறம் புகுந்த வீட்டிற்கு வந்துவிட வேண்டும். இந்த வீட்டைதான் தன்னுடைய வீடாக கருத வேண்டும். ஆணுக்கு புகுந்த வீடே கிடையாதே. எனவே இது போன்ற சமூக வன் முறைகள் காலங்காலமாக நம் நெஞ்சில் பதிந்து கிடக் கிறது. அவற்றுள் ஒன்று தான் கடவுளின் கதைகளில் கூட இரண்டு மனைவியரை காட்டி அதை நியாயப்படுத்த முடிகிறது.

ஆனால், திருமுருகாற்றுப்படையில் இரண்டு மனைவியர்கள் முடிவதில்லை. அது பழைய இலக்கிய மாக இருக்குமானால், இது பிற்காலத்து பாடல்கள்

என்று சொல்லலாம், எனவே தான் இதையெல்லாம் நாம் தேடிக்கொண்டிருக்கிறோம். காலமாற்றங்கள் எப்போது நிகழ்ந்தன என்கிற தேடுதலைத் தவிர, இதில் முருகனுடைய சொந்த வாழ்க்கையைப் பற்றிய ஒரு சிக்கலும் இல்லை. அவர் நமக்கு முப்பாட்டனும் இல்லை. ஆகையால் அவரைப் பற்றிய கவலை இல்லை.

என் உரையில் இருக்கிற செய்திகளலெல்லாம் சமூகம் பற்றிய கவலைதான். ஒன்று தெளிவாகத் தெரிகிறது திருமுருகாற்றுப்படை என்பது பிற்காலத்து நூல். அதில் என்ன உனக்கு மகிழ்ச்சி என்று நீங்கள் கேட்கலாம், சங்க இலக்கியத்தில் கடவுள் சார்ந்த பாடல்கள் குறைவு. திருமுருகாற்றுப் படையை நீங்கள் கொண்டு போய் சங்க இலக்கியத்திலே வைத்து, இந்த நம்பிக்கை அப்போதே இருக்கிறது என்ற ஒரு பொய்யான வரலாறு சொல்லுகிறீர்கள். திருமுருகாற்றுப் படை மிகவும் பிந்தியது, பரிபாடல் பிந்தியது.

என்னுடைய ஆசிரியர் மறைந்த ஐயா சஞ்சீவி அவர்கள் தான் சொல்லுவார், சங்க கால வாழ்க்கை என்பது, இயற்கை வாழ்வு. பெரும்பாலும் சங்க இலக்கியங்களை பார்க்கும் போது இயற்கை சார்ந்த வாழ்வு. குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் இவையெல்லாம் கூட இயற்கையான பிரிவினைகள். என் வகுப்பில் ஒரு மாணவர் எழுந்து கேட்டார். அது ஒரு நல்ல கேள்வி, முதுகலை எம்.ஏ. படிக்கிற ஒரு மாணவர், குறிஞ்சியில் வாழ்பவர்களுக்கு கூடலும் கூடல் நிமித்தமும், மருதம் ஊடலும் ஊடல் நிமித்தமும் என்று சொல்லுகிறீர்களே, குறிஞ்சியில் வாழ்கிற கணவன் மனைவி எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். மருதத்தில் வாழ்கிறவங்க எப்போதும் சண்டை போட்டுட்டா இருப்பாங்க, இதெல்லாம் என்னங்கய்யா நியாயம் என்று கேட்டான். உண்மை தான் அதற்குப் பின்னால் ஒரு சின்ன அறிவியல் காரணங்கள் இருக்கின்றன என்று நான் சொன்னேன்.

ஒரு எடுத்துக்காட்டு, புறச்சூழல், அகச்சூழலைத் தீர்மானிக்கும். நீங்கள் எப்படி இருக்கிற நிலையில் இருக்கும் நம் மன நிலையில் மாற்றம் வரும். நான் என்னுடைய மாணவருக்குச் சொன்னேன், சரிவிடு அந்த காலத்தை, நீ திருமணம் செய்த பிறகு, தேனிலவு போகலாம் என்றால் எங்கே போகக் கூடும் தமிழ் நாட்டிற்குள் என்று கேடடேன், தம்பியே சொன்னான் ஊட்டிக்கோ, கொடைக்கானலுக்கோ போகலாம் என்று, ஏன் சிவகாசியிலே முதலிரவே நடக்காதா? எதற்காக ஊட்டிக்கு போகிறாய் என்றால், வெளியிலிருக்கிற அந்த குளுமையான சூழல், மனதிற்கு இதமாக இருக்கும் என்று தோன்றும். எனவே அப்படிப்பட்ட ஒரு குளுமையான இயற்கைச் சூழலில் ஒரு இடம் என்பது அதற்குரியது என்று சொன்னார்களே தவிர, அங்கே கூடல் மட்டும் தான், சண்டையே வராது என்று பொருளில்லை. மருதம் என்பது வயல் சார்ந்த இடம் ஏன் வயல் சார்ந்த இடத்தில்தான் சண்டை வருமா?

நான் இலக்கிய வகுப்புக்கு மறுபடியும் போவது போல தோன்றுகிறது. இருந்தாலும் வெளியே வந்து விடுகிறேன். ஊடல் என்பதே ஒரு பொய்க்கோவம். சின்னச் சின்ன சண்டைகள் ஏன் வருகிறதென்றால் மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த இடமும். உணவுக்கு பஞ்சமில்லை. மாடு கட்டி போரடித்தால் மாளாது செந்நெல் என்று ஆனைகட்டி போரடித்த அழகான தென்மதுரை பாண்டிய நாடே வளமாக இருந்த காலம். சோழநாடு சோறுடைத்து என்று சொன்னார்கள். வயிறு நிரம்பியவுடனே நம்மாளு சும்மாயிருக்க மாட்டான். அதுதான் அடிப்படையான செய்தியும் கூட, நீங்கள் கலைகளை இன்றைக்கும் பார்த்தீர்களானால் கும்பகோணம், தஞ்சாவூர் தான். கோயில், கலைகள் எல்லாம் மிகுதி. என்ன காரணம் என்றால், சாப்பாட்டுக்குப் பஞ்சமில்லை. நீங்கள் எண்ணிப் பாருங்கள். நான் உங்களையெல்லாம் உட்காரவைத்து சிலப்பதிகாரத்தைப் பற்றி விரிவாகச் சொன்னால் நீங்களெல்லாரும் மகிழ்ச்சியோடு கேட்கக்கூடும் சாப்பிட்டு வந்திருந்தால். ஒரு பத்துநாள் பட்டினியாயிருக்கிறவர்களையெல்லாம் உட்காரவைத்து நான் சிலப்பதிகாரமெல்லாம் பேசினால் ஒரு பெரிய தகராறு வந்துவிடாதா, ஏண்டா சாப்பிடுறதுக்கே வழி இல்லை, உனக்கென்ன சிலப்பதிகாரம் வேண்டியிருக்கு என்பார்கள். வயிறு நிறைந்ததற்கு பிறகு கலைகளின் மீது ஒரு நாட்டம் ஏற்படுகிறது. கலைகளை ரசிக்கிறவன், நடனத்தை ரசிக்கிறவன் கொஞ்ச நேரத்துல நடனமாடுகிற பெண்ணை ரசிக்கிறான். அங்கேதான் சண்டை வருகிறது.

கணவனுக்கும் மனைவிக்கும் ஏன் மருதத்தில் ஊடல் வருகிறதென்றால், நம்மாளு நடனத்தோடு நிக்க மாட்டான். நடனத்தை மட்டும் தான் ரசிக்கிறானா, அப்ப அப்ப மனைவியை திரும்பி பார்த்துக் கொள்வான். இது எங்கே வந்தது என்றால் சிலப்பதிகார பாண்டிய மன்னனுடைய அவையிலேயே இது வந்துவிட்டது. நாம் அவற்றையெல்லாம் பார்க்கிறோம். நான் வேடிக்கையாகச் சொல்லவில்லை. நாட்டிய மாதர்களை அந்த பாண்டிய மன்னன் ரொம்ப நேரம் ரசிக்கிறான். இவ்வளவுக்கும் அந்தப்புறத்தில் வேற ஆயிரம் பெண்கள் இருக்கிறார்கள், இருந்தாலும் இந்த பெண்களை மன்னன் பார்த்து ரசித்தவுடனே தான் அந்த அரச மாதவிக்கு கோபம் வந்து, அதைச் சொல்லாமல் எனக்கு கொஞ்சம் தலைவலியாக இருக்கிறது என்று சொல்லிக் கிளம்பிப் போகிறாள். மன்னன் பின்னாலேயே போகிறார். போய் சமாதானப்படுத்துவதற்கு தான் கேட்கிறான் உன் சிலம்பு எப்படி தொலைந்தது என்று, எப்படி இந்த கதை மாறுகிறது என்பதற்காக சொல்லுகிறேன். ஆகையினால் இவை ஒரு விதத்தில் இயற்கை சார்ந்த வாழ்வு.

என்னுடைய ஆசிரியர் அவர்கள் சொன்ன செய்தியைச் சொல்லுகிறேன். சங்க கால வாழ்க்கை என்பது இயற்கை வாழ்வு, இடைக்கால சமூகத்தினு

டைய வாழ்க்கை என்பது இறை வாழ்வு. பெரும்பாலும் நீங்கள் தமிழ் இலக்கியத்தினுடைய இடைக்கால இலக்கியங்களில் தான் இந்த கடவுள் புராணம், கதைகள் அனைத்தும் வந்து சேர்ந்தவை. பெரிய புராணம், கம்பராமாயணம் எல்லாப் புராண இலக் கியங்களும். எனவே சங்க வாழ்வு இயற்கை வாழ்வு. இடைக்கால வாழ்வு. இக்கால வாழ்வு இறை வாழ்வு.

இப்ப ஒரு பெரிய பிரச்சினை சாப்பாடுதான். வாழ்க்கை என்பது பொருள், முதல் சார்ந்ததாக ஒரு யதார்த்தம் சார்ந்ததாக இல்லை, மாறிப்போய் இருக்கிறது. இது ஒரு பக்கம் இருக்க, சங்க கால வாழ்வு இயற்கை வாழ்வே தவிர இறை நம்பிக்கை கொண்ட வாழ்வாக நமக்கு சான்றுகள் கிடைக்கவில்லை. திரு முருகாற்றுப்படையை அங்கே நிறுத்தினால் நம் வரலாற்றில் ஒருபிரிவு ஏற்படுகிறது. அந்தப் பிரிவைச் செய்தவர் தமிழ் தாத்தா தான் என்று கிருஷ்ணவேல் உறுதியாகச் சொல்கிறார். யாரோ செய்திருக்கிறார்கள் என்பது உறுதி. தமிழ் தாத்தாவாகவும் இருக்கலாம், ஆனாலும் நீங்கள் முதல் குற்றப்பத்திரிக்கையைத் தான் தந்திருக்கிறீர்கள். முழுமையான குற்றச்சாட்டு தருவ தற்கு முன்பு மேலும் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

கிருஷ்ணவேல் சொன்னதால் அப்படியே நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அவருக்கு பங்கு இருந்தி ருக்கலாம். இந்த நோக்கில் ஆராய்ச்சிகள் நடைபெற வில்லை. பத்துபாட்டுக்குள் திருமுருகாற்றுப்படையை திணித்தவர்கள் யார். கிருஷ்ணவேல் ஒரு செய்தியைச் சொல்கிறார், ஆற்றுப்படை என்பது வழிப்படுத்துதல், ஆறு என்றால் வழி, ஆற்றுப்படை என்றால் வழிப் படுத்துதல். பசியோடு வருகிற புலவனை, நானும் பசியோடுதான் இருந்தேன், இந்த மன்னனைப் பார்த்த பிறகு எனக்கு இவ்வளவு பணமும் பொருளும் கொடுத்திருக்கிறார். நான் எடுத்துக் கொண்டு போகிறேன், நீயும் போய் அவரிடம் வாங்கிக் கொள். இதுதான் ஆற்றுப்படை, தொடர்ந்து இப்படி 50 பேர் அனுப்பினா அப்பறம் மன்னர் பிச்சை எடுக்கிற நிலைமை வந்துவிடும். யாராவது ஒருத்தர் கொடுத்தா வாங்கிக்கொண்டு போய்விட வேண்டியது தானே, அதற்குப் பிறகு வருகிறவனைப் பார்த்து நீங்களும் போங்கள் என்று அனுப்புவது ஆற்றுப்படை. அனைத்து ஆற்றுப்படை நூல்களும் மன்னரிடம்தான் வெளிப்படுத்தப்படுகின்றன. திருமுருகாற்றுப்படை முருகனிடமிருந்து வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே இது பொருந்தவில்லை. இந்தப் பார்வை அறிவியல் பார்வை, மற்ற நூல்களோடு பொருந்தவில்லை. இது இப்படிபட்ட ஒரு தவறான வழியில் திணிக்கப்பட்டி ருக்கிறது என்று அவர் சொல்கிறார். அது ஆய்வுக் குரியது.

அது போல எட்டுத்தொகையில் நான்கு நூல்கள், ஐம்பெருங்காப்பியங்களில் மூன்று. இவ்வளவுதான் பழைய இலக்கியங்களில் உ.வே.சா. பதிப்பித்து எழுதியது. என்ன மாதிரியான ஒரு கற்பிதம் இங்கே இருக்கிறதென்றால், நீங்கள் பொதுவாக மேலோட்ட மாக இருக்கிற யாரை வேண்டுமானாலும் கேளுங்கள். தமிழ் நூல்களை பதிப்பித்தவர் யார் உ.வே.சா தான் என்பார்கள். தொல்காப்பியத்தைப் பதிப்பிக்கக்க வில்லை, திருக்குறளைப் பதிப்பிக்கவில்லை. திருக் குறளை இதுவரையில் நான் கருதியிருந்தது 1847ல் வளவை.மகாலிங்க ஐயர் பதிப்பித்த நூல்தான் முதலில் பதிப்பித்த நூல் என்று, நான் இந்த இடத்திலும், பல கூட்டத்திலும் வளவை.மாகாலிங்கனார் என்று சொல்லலாம். வேண்டுமென்றே நான் மாகாலிங்க ஐயர் என்று. நாங்கள் பார்ப்பனர்களை எதிர்த்தால், பார்ப்பனர்கள் செய்திருக்கிற நல்ல செயல்களை மறைக்க விரும்பவில்லை. யார் செய்திருந்தாலும் அதை வெளிப்படையாகச் சொல்ல வேண்டும், என்பதற்காக நான் கூறுகிறேன்.

இப்போது அண்மையில் அடையாறில் இருக்கிற, ரோஜா முத்தையா செட்டியார் நூலகத்தில் அதற்கு முந்திய திருக்குறளைப் பதிப்பித்து வெளியிட்டிருக் கின்றனர் 1812ல் அப்போது தான் அச்சு இயந்திரமே வந்தது. 1812ல் பதிப்பித்த அந்த பதிப்பை இப்போது ரோஜா முத்தையா நூலகத்தில் வைத்திருக்கிறார்கள், அது வெளிவந்த நேரத்தில் நான் அந்த இயக்குனரைச் சந்தித்தேன். நூலகத்திற்கு படிப்பதற்காகச் சென்ற போது, அதில் ஒன்றை காட்டினார் படிப்பதற்கே கடினமாக இருந்தது. அந்த எழுத்துப் முறைகளில் புள்ளி என்பதே கிடையாது மெய்யெழுத்துக்களில் எதற்கும் புள்ளிகள் கிடையாது. அன்பர் என்றால் அனபர என்று தான் இருக்கும். நாமாக அதைப் புரிந்து கொண்டு படிக்க வேண்டும். ஏன் புள்ளி இல்லை என்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. ஓலைக்சுவடி களில் எழுதுகிறபோது அதில் புள்ளி வைத்தால், பொத்தலாக இருக்கும், புள்ளியாக இருக்காது. எனவே அந்த புள்ளிகள் இல்லை. எத்தனை காலத்திற்கு புள்ளிகள் இல்லை. கடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளார் எழுதியிருக்கிற அந்த பாடல்கள் எழுதிய அவருடைய கையெழுத்து இருக்கிறது. அதில் எந்த இடத்திலும் புள்ளி இல்லை, சிதம்பரம் என்பதை வள்ளலார் பல இடங்களில் எழுதியிருக்கிறார். சிதமபரம என்றுதான் இருக்கிறது. அதைப்புரிந்து கொண்டுதான் சிதம்பரம் என்று படிக்க வேண்டும்.

அந்த 1812ல் வந்த திருக்குறள் இந்த எழுத்துகளில் அப்படியே மறுபடியும் அச்சிடவில்லை, அப்படியே ஓலைச்சுவடியில் பதிப்பித்திருக்கிறார்கள். எவ்வளவு விலை என்று கேட்டேன் இன்னமும் விலை வைக்க வில்லை ஏதாவது ஒரு விலையை வைக்கவேண்டும் என்றார்கள். அப்போதுதான் நான் சொன்னேன், இது மிக அரிய நூல், ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் வெளிவந்தது இது நமக்கு கிடைத்திருக்கிற தென்றால், இந்த நூலுக்கு விலை வைக்க முடியாது. வேண்டுமானால் இப்படிச் செய்யலாம், ஒரு குறளுக்கு

ஒரு ரூபாய் என்று வைக்கலாம். 1330 ரூபாய் என்று இந்த புத்தகத்தினுடைய விலை, அதுவும் குறைவுதான். 206 ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள நூல் கிடைக்கிறது. இப்போது புரிகிறது மகாலிங்கம் ஐயர் பதிப்பிற்கு முன்னாலேயே பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே இப்படி பல பதிப்பாசிரியர்கள் பல நூல்களை பதிப்பித்திருக்கிறார்கள்.

உ.வே.சாவும் பதிப்பித்திருக்கிறார். ஒட்டுமொத்த மாக உ.வே.சா தான் எல்லாவற்றையும் பதிப்பித்தார் என்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகிறார்கள் இல்லையா அது தவறானது. இந்த புத்தகத்திலிருந்த நான் சொல்லுகிறேன் அது தவறானது. அதையும் திட்டமிட்டுத்தான் செய்திருக்கிறார்கள். மற்ற யாருடைய பெயரும் வராமல் அனைத்தும் உ.வே.சா தான் என்று சொல்லுகிறார்கள். பிறகு உ.வே.சா வைப் பற்றிய பல விமர்சனங்களும் இருக்கின்றன. நம்முடைய கிருஷ்ணவேல் கூட எழுதாத விமர்சனம். வையாபுரி பிள்ளை அவர்கள் எழுதிய விமர்சனங்களைப் பற்றிச் சொல்கிறேன் அவற்றையெல்லாம் அவர் உவமையாக ஏற்றுக்கொண்டவர்.

எழுபது வயது வரை உ.வே.சா. அவர்கள் எழுதிய கட்டுரைகளைவிட அவர் 87 வயது வரை வாழ்ந்தவர். கடைசி 17 ஆண்டுகளில் அவர் எழுதிய கட்டுரை களின் எண்ணிக்கை மூன்று மடங்கு கூடுதலாம்! கிருஷ்ணவேல் இதையெல்லாம் எடுத்துத் தேடலாம். மூன்று மடங்கு கூடுதல். அதில் என்ன செய்தி என் றால், பிற்காலத்தில் அவரால் எழுதப்பட்ட கட்டுரை களை விட மொழிநடை அவருடைய மொழிநடையாக இல்லை. அவர் சேகரித்த குறிப்புகளை வைத்துக் கொண்டு அவருடைய மாணவர்கள் எழுதியிருக்கக் கூடும் என்று வையாபுரி பிள்ளையே சந்தேகப்பட்டு எழுதுகிறார். அதற்கு இன்னொரு சான்றும் நான் உங்களுக்குத் தருகிறேன். நான் அதற்குள் போய் ஆய்வு செய்தவன் அல்ல, படித்துக் கொண்டே போகிற போதே கிடைக்கிற செய்திகள். கி.வா.ஜெகநாதன் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு ஒரு பெரிய புத்தகமாக வந்திருக்கிறது, ஒருவர் எழுதியிருக்கிறார். கி.வா.ஜெகநாதனுடைய வாழ்க்கை வரலாற்றில் ஒரு குறிப்பு இருக்கிறது. தன்னுடைய ஆசிரியரான, மீனாட்சி சுந்தரம் பிள்ளையினுடைய மாணவர் உ.வே.சா. மகா மகோபாத்தியாய என்றால் பெரும் புலவர் என்று பொருள். அது பண்டிதமணி கதிரேசன் அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டம். அவையெல்லாம் வழங்கப்பட்டவைதான், அதில் மாற்றம் ஒன்றும் இல்லை. அதற்குப் பிறகு அவருடைய மாணவர் கி.வ.ஜா. அவர்கள் பல இடங்களில் ஆசிரியர்களின் குறிப்புகளை எடுத்து எழுதி ஆசிரியர் உ.வே.சாவிடம் பதிப்பித்து காட்டி, அவர் சரியாக இருக்கிறதென்று சொன்னால் அல்லது, திருத்து என்ற சொன்னால் அதை ஏற்றுக்கொண்டு மறுபடியும் எழுதி அதனை வெளியிட்டார் என்ற கி.வ.ஜாவைப் பற்றிய குறிப்பு இருக்கிறது.

எனவே இறுதி நாள்களில் உ.வே.சா, அவர்களால் எழுத முடியவில்லை. ஆனால், இறுதி நாள்களில் தான் ஏராளமான கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இதுவும் உ.வே.சாவைப் பற்றிய ஒரு செய்தி. எப்போதும் ஆய்வு என்பதற்கு முன்னால் நமக்கு ஒரு முடிவு இல்லாமல் இருப்பது நல்லது.

எல்லோருக்கும் சில கருத்துகள் உண்டு. கருத்து இல்லாத, சார்பு இல்லாத மனிதர்கள் இல்லை. இயன்றவர்கள் ஆய்வு என்று உள்ளே போகிற க்ஷபோது, இதை சொல்லுவதற்காக ஆய்வு செய்யாமல், ஆய்வு செய்த பிறகு கிடைத்த செய்தியை சொல்லுவது என்பதே சரியாக இருக்கும். உ.வே.சா அவர்களைப் பற்றி நீங்கள் எழுதியிருக்கிறது, எழுப்பிய வினாக்களில் நியாயம் இருக்கிறது. ஆனால் இன்னம் முழுமையாக ஆய்வு செய்து முடித்துவிட வில்லை என்று தோன்றுகிறது.

ஆய்வின் தொடக்க மாக இந்த நூல் அமையட்டும். நீங்களும் இந்த நூலைப் படிக்கிற மற்றவர்களும் இது குறித்து சிந்திப்பதற்கு வாய்ப்பை தந்திருக்கிறீர்கள். அந்த அளவிற்கு இந்த நூலுக்கான நியாயத்தை ஏற்கிறேன். உங்கள் முயற்சியை பாராட்டுகிறேன், தொடர்ந்து பல செய்திகளை அவர் தேடி கண்டுபிடித்து எழுதிக்கொண்டிருக்கிறார். அவருடைய துறை வேறு, அவர் ஒன்றும் தமிழில் பி.ஹெச்.டி பட்டம் வாங்கியவர் அல்ல, அவருடைய துறை வேறு. ஆனால் இதில் இந்த அளவிற்கு இந்த நூலை ஆய்வு கொண்டிருப்பதே பாராட்டுக்குரியது.

சில மேடைகளில் தமிழ் படிக்காதவர்கள் ஆய்வு செய்தால் சங்க இலக்கியங்களைப் பற்றி நல்ல ஆய்வுகள் கூட வரும். ஆகையினால் அப்படி வந்திருக்கிற நூலாகவும் நான் பார்க்கிறேன். உங்களுடைய முயற்சியை வரவேற்கிறேன். முடிவுகளை ஆராய்கிறேன். நன்றி வணக்கம்.

●


## விளம்பர கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/-
**(முழுபக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/-
**(முழுபக்கம்)**
**பின்னட்டை ரூ.** 10,000/-
**(முழுபக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ.** 5,000/-
**(முழுபக்கம்)**

# பனையின் பயன்கள்

1. சோற்று நார் அகணி ஆகியவற்றைக் கொண்ட உரி செய்து, வீடுகளில் பால், தயிர், வெண்ணெய் போன்ற பொருள்களை பானைகளில் வைத்துக் கைக்கெட்டாமல் தொங்க விடுவர். உரியில் தொங்க விடுவதால் எறும்பு, எலி ஆகியவற்றில் தொல்லை இராது.

2. சோற்று நார் மூலம் பிரிமணை தயாரித்து, நீர்க் குடங்கள், சமையல் பாத்திரங்கள் தரையில் பட்டு உடை யாமலும், கரிபடியாமலும், அசையாமலும் இருக்க வைக்க பயன்படும்.

3. அகணி, புறணி, குருத்தோலை ஆகியவற்றைக் கொண்டு, விதைப்பெட்டி தயாரிப்பார்கள். விதைக்கும் விதை யைப் பெட்டியில் நிரப்பிக் கையில் வைத்துக்கொண்டு நிலத்தில் விதையைத் தூவ வசதியாய் பயன்படுவது விதைப் பெட்டி.

4. அகணி, புறணி, குருத்தோலையைக் கொண்டு, கடகப் பெட்டி தயாரிப்பார்கள். தானிய வகைகள் வைக்கவும், அவற்றை எடுத்துச் செல்லவும் பயன்படும் பெரிய பெட்டிதான் கடகப் பெட்டி.

5. அகணி, புறணி, குருத்தோலையைக் கொண்டு பலகாரப்பெட்டி அல்லது பணியாரப்பெட்டி தயாரிப்பார்கள். அழகான வண்ணங்களுடன் செய்யப்பட்டது. விதைப் பெட்டிக்கும் சற்றுப் பெரியது. திருமணமான இணையர் களுக்கு வீட்டில் செய்யும் பலகாரங்களை போட்டுக் கொடுத்து அனுப்பும் பெட்டி.

6. அகணி, புறணி, குருத்தோலைகளைக் கொண்டு அஞ்சடுக்குப் பெட்டி தயாரிப்பர். ஒரு பெட்டிக்குள் ஐந்து பெட்டிகள் கொண்ட அடுக்குண்டு, தேவையான பொழுது பயன்படுத்திக்கொண்டு மற்ற வேளைகளில் ஒன்றுக்குள் ஒன்றாய் வைத்து, உயரமான இடத்தில் தொடங்க விடுவார்கள்.

7. அகணி, புறணி, குருத்தோலைகளைப் பயன்படுத்தி அஞ்சறைப்பெட்டி தயாரிப்பர். மிளகு, சீரகம் போன்ற குழம்புக்குத் தேவையான பொருட்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து விடாமல் தனித்தனியாக இருப்பதற் காக நீண்ட சதுரப்பெட்டியில் செய்வர். இதில் ஐந்து தனித்தனி அறைகளுள்ள தால் அஞ்சறைப் பெட்டி என அழைக்கப் படுகிறது.

8. அகணி, புறணி, குருத்தோலை உதவியுடன் இறைக் கூடை தயாரிப்பார்கள். இரண்டு பேர் எதிரெதிரே நின்று கொண்டு, நான்கு கயிறுகளைப் பிடித்துக் கொள்ளும் நீர் இறைக்கப் பயன்படும் முக்கோணப் பெட்டி. இது வயலுக்கு நீர் பாய்ச்ச உதவுவது. குசலம் அருகேயுள்ள தீராம்பட்டியில் இறைக் கூடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

9. அகணி, புறணி, குருத்தோலைகளினால் சோற்றுப் பெட்டி தயாரிப்பார்கள். ஓலையால் பின்னி புறணியால் சுற்றி அகணியால் தைக்கப்பட்டதாக இருக்கும். சிறிய சமையல் பாத்திரங்களை இதனுள் வைத்துக்கட்டி நீண்ட தூரம் செல்லும்பொழுது மாட்டு வண்டிகளில் எடுத்துச் செல்வர்.

10. அகணி, புறணி, குருத்தோலைகள் மூலம் துணிப் பெட்டி தயாரிப்பார்கள். வட்ட வடிவமான வாய் அழகாய் வண்ண நார் கொண்டு தைக்கப் பட்டிருக்கும், பட்டுச் சேலை களை இதில் வைத்துக் கொள்வார்கள்.

11. சோற்று நார் கொண்டு கமலை வடம் தயாரிப்பார்கள். இது நீர் இறைக்க உதவும்.

அகணியைப் பயன்படுத்தி தேர் வடம் தயாரிப் பார்கள். விழாக்காலங்களில் நூற்றுக்கணக் கான மக்கள் தேரை இழுக்க இந்த தேர் வடம் பயன்படுகிறது. யானை வடமும் தயாரிப்பார்கள். இது யானையைக் கட்டி வைக்கப்படும். மாட்டுத் தும்பும் தயாரிப்பார்கள். இது மாட்டைத் தொழுவத்தில் கட்டி வைக்கப் பயன்படும். நீர்க்கயிறு தயாரிப்பதும் அகணி யால் தான். இதைக் கொண்ட கிணற்றில் நீர் இறைக்கப் பயன்படுவது

சாரக் கயிறுகளும் தயாரிப்பார்கள். இது கோயில் கட்டும் பொழுது உயரமான சாரம் கட்டவும், கனமான சட்டங்களைக் கட்டி இழுக்கவும் பயன்படும். அகணி களை வைத்து, கட்டில், நாற்காலி, உட்காரும் நாற் காலியின் அடிப்பகுதி, படுக்கும் கட்டில் முதலிய வற்றைப் பின்னுவார்கள்.

இவை தவிர்த்து, மக்கள் உண்பதற்கும், விலங்குகள் உண்பதற்கும் பனை தனது பங்களிப்பைச் செய்து வருகிறது. பனையின் பயன்கள் எண்ணிலடங்காதது. பனை வளர்ப்போம் பயன் பெறுவோம். •



ஒரு கூட்டத்தில் பேசுகிறார். எழுதி வைத்துப் பேசுகிறவர் அல்ல கருணாஸ். பேச்சில் சில இடங் களில் வார்த்தை முரண்கள் வெளிப்பட்டது உண்மை. முழுத் தொகுப்பையும் கேட்டு பின்னர் கருத்துச் சொல்பர்களிடத்தில் மாற்றுக் கருத்தும் உண்டு. அது எப்படியாக இருந்தாலும், கருணாஸ் தனது வருத்தத்தை ஊடகங்கள் வாயிலாக மக்களிடம் கூறினார். அத்துடன் அதை முடித்திருக்க வேண்டும் அரசு.

என்ன செய்தது அரசு? அதிகாலையில் கருணாஸ் அவர்கள் அவரது இல்லத்தில் தூக்கத்தில் இருந்த போது தமிழகக் காவல்துறையினரால் கைது செய்யப் பட்டு நுங்கம் பாக்கம் காவல்நிலையத்தில் சுமார் நான்கு மணிநேரம் விசாரிக்கப்பட்டு, அதன்பிறகு இராயப் பேட்டை மருத்துவ மனைக்கு கொண்டுசென்று, மருத்துவ பரிசோதனை செய்து மாண்பமை நீதியரசர் கோபிநாத் அவர்கள் முன் நேர்நிறுத்தப் படுகிறார். நீதியரசர் அவர்கள் கொலைக்குற்றத்திற்கான எந்தச் செயலும் அவர் செய்யவில்லை என்று கூறி அவர் மீது போடப்பட்டிருந்த 307 பிரிவை நீக்கி மற்ற குற்றங்களுக்காக சிறையெடுக்க அனுமதிக்கிறார்.

காவல் துறையினர் கருணாசை புழல் சிறைக்குக் கொண்டு செல்கிறார்கள். பின்னர், ஏதேதோ காரணம் காட்டி வேலூர் சிறைக்கு கொண்டு செல்கிறார்கள். பிணைக்காக மனு செய்யப் படுகிறது. விசாரண நடக்கிறது. காவலில் வைத்து விசாரிக்க நீதியரசரிடம் அரசுத்தரப்பு முனைகிறது. அதுவும் மறுக்கப் படுகிறது.

ஒரு வழியாக சட்டமன்ற உறுப்பினர் கருணாஸ் வெளியே வருகிறார். செய்தி ஊடகங்கள் அவரை நோக்கிப் படையெடுக் கின்றன. எதையும் நேருக்கு நேர் பேசும் கருணாஸ் நேர்படப் பேசுகிறார். ஊடகத்தினர் கேட்கும் கேள்விகளுக்கு அவருக்கே உரிய பாணியில் பதில் கொடுக்கிறார். கடந்த ஆண்டு பூலித் தேவன் விழாவில் ஏற்பட்ட சலசலப்பை வழக்காக்கி அதற்காக கருணாசை கைது செய்ய முனைகிறது காவல்துறை.

இத்தனை நெருக்கடிகளும் ஏன் என்றால், கருணாஸ் பேசுகிறார். உண்மையைச் சொல்கிறார், சசிகலாவுக்கு நன்றி யோடு இருக்கிறார், அரசை விமர் சிக்கிறார் என்ற காரணங்கள் தான். இப்போ தையை அரசின் அதிகாரங்களில் இருப்பவர் களுக்கு பேசத் தெரியவில்லை. அவர்களது அறியாமை அடிக்கடி ஆமைபோல் அடிக்கடி கழுத்தை நீட்டி விடுகிறது. கம்பராமாயணத்தை எழுதியவர் சேக்கிழார் என்று சொல் லக்கூடிய அறிவார்ந்தவர் முதலமைச்சராக இருக்கிறார். இப்படி இருக்கும்போது விபரமாகப் பேசும் ஒருவர் அவர் களைக் குறை கூறுவது பிடிக்க வில்லை. ஆகவே, தங்களது நலனுக்காக கைது, அலைக் கழித்தல் என்று நிலைகுலைய வைக்கின்றனர். ஆனால் கருணாஸ் அவர்கள் எல்லாவற்றை யும் தாங்கக்கூடிய வராகவே இருக்கிறார்.

கருணாசுக்கு அடுத்து நக்கீரன் கோபாலுக்கு குறி வைக்கப்பட்டிருக்கிறது. காவல்துறையால் கைது, நீதி மன்றத்தால் விடுதலை என்று தமிழக நிலவரம் சென்று கொண்டிருக்கிறது. இம்மாதிரியான செயல் பாடுகள் தொடர்ந் தால் அரசு நிலைக்காது என்ற நிலை வந்து விடும்.

**வேர்மகள்**



## சட்டமன்ற உறுப்பினர்

# கருணாஸ் கைது ஏன்?

# திரு உ.சகாயம் அவர்களின் மாபெரும் தமிழ் கையெழுத்து திருவிழா




ஒருகோடி தமிழ்க் கையெழுத்து பெற்று கின்னஸ் சாதனை முயற்சியின் வெற்றிவிழாகொண்டாட்டம். மக்கள் பாதை அமைப்பு சார்பில் தமிழ்க்கையெழுத்து இயக்கம் மதுரையில் நடத்தப்பட்டது. மக்கள் பாதை அமைப்பு பொதுமக்கள், அரசு அலுவலகர்கள் தமிழில் கையெழுத்திட வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்து வகையில் கடந்த ஆக.15 ஆம் தேதியன்று தமிழ்க்கையெழுத்து இயக்கத்தை துவக்கி நடத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக மதுரை மாவட்ட மக்கள் பாதை சார்பில் மதுரை மாநகரத்தில் உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்க்கையெழுத்து பெறும் இயக்கம் நடத்தப் பட்டது. மதுரை மாவட்ட கூடுதல் ஒருங்கிணைப்பாளர் உ.விவேக் அவர்கள் தலைமை வகித்தார்.

தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களாக காவல்துறை உதவி ஆணையர் (வரதட்சணை ஒழிப்புப்பிரிவு) ஷி.வி .மல்லிகா அவர்கள், முதல்வர் வக்புவாரியகல்லூரி மு. அப்துல்காதிர் அவர்கள், மீனாட்சி மிஷின் மருத்துவ மனை பொதுமேலாளர் ஜே. ஆட்லி அவர்கள், அம்பிகா மகளிர்கலை அறிவியல் கல்லூரி முதல்வர் எஸ்.எ.ரஸிதா அவர்கள், நெல்பேட்டை உணவகம்

நிறுவன அதிபர், இயற்கை ஆர்வலர், திரு.சிவா அவர்கள், கவிமாமணி, ஜே. ரத்தினம் அவர்கள், சங்கப் புலவர், வழக்குரைஞர் சுந்தரம் அவர்கள், எழுத்தாளர் ஆத்மார்த்தி அவர்கள்,

இயக்குநர் தொண்போஸ்கோ. ஜனனம் த. ஜான்தர் மநாதன் அவர்கள், மதுரை இலக்கியமன்ற நிறுவனர் – ஆவணிமாடசாமி அவர்கள், தமிழ்த்துறைத் தலைவர் அம்பிகாகலை அறிவியல் கல்லூரி கு. முத்துரமா அவர்கள், ஆங்கிலத்துறைத்தலைவர் அம்பிகாகலை அறிவியல் கல்லூரி டி. சிவப்பிரியா அவர்கள், செந்தா மரைக்கல்லூரி நிர்வாகி நல்லமணி அவர்கள்,

முதல்வர் மங்கையர்க்கரசி கல்வியியல் கல்லூரி ஆரோக்கிய பிரிசில்லா உள்ளிட்டோர் பங்கேற்றனர்..

மேலும் முக்கிய அம்சமாக பொதுமக்கள் அனை வரும் எளியமுறையில் பயன்படுத்தக்கூடிய சோளமா வினால் தயாரிக்கப்பட்டு எளிதில் மக்கக் கூடியவகையி லும், உரமாகக் கூடியதாகவும் இப்பை தயாரிக்கப்பட் டுள்ளது.

இவ்விழாவில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தி னர்கள், மாணவ, மாணவியர்கள், மற்றும் பொது மக்கள், அனைவரும் இந்நிறுவனம் தயாரித்துள்ள பையை உபயோகிப்பதாக உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர்.

மேலும் நம் பாரம்பரிய கலாச்சாரத்தைப் போற்றும் வகையில், நாட்டுப்புறப்பாடல், கரகாட்டம்,

பறையாட்டம், ஒயிலாட்டம், மாடாட்டம், மயிலாட்டம், மரக்கால் ஆட்டம்,

மலேசியா, இந்தோனேசியா, கனடாபுகழ் ஆசிய அளவில் மரக்கால் ஆட்டத்தில் சாதனை புரிந்த “கலை வளர் மணி”, கலைவேந்தன் விருதுபெற்ற மதுரை டாக்டர் த. கோவிந்தராஜ் எம்.ஏ.கலை மேம்பாட்டு நிறுவனம். கோவிந்தராஜ் கலைக் குழுவினர் செய்து அசத்தினர்..

நம் கலாச்சாரத்தின் முக்கிய அங்கமாக மள்ளர் கம்பம்... பள்ளி மாணவர்கள் இதனை செய்து திரு. ரமேஷ் கலைக் குழுவினர் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தனர். மேலும் இதில் பல்வேறு விதமான பள்ளி, கல்லூரி மாணவ, மாணவி யர்களுக்கு போட்டிகள் நடைபெற்றது. (பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கலந்துரையாடல், சமையல் போட்டி, கோலப்போட்டி நடைபெற்றது)

முடிவில் வெற்றி பெற்றவர்கள் அனைவருக்கும் பரிசுகள், மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

மேலும் இவ்விழாவில் கலந்துகொண்ட அனை வரும் தமிழ்மொழியில் கையெழுத்திட்டு உறுதி மொழியை ஏற்றுக் கொண்டனர்.



அமெரிக்காவில் வசித்து வருகிற பிஜூ ஆபிரகாம், தாஜி ஆபிரகாம் என்ற இந்திய தம்பதியரின் மகனான தனிஷ்க் ஆபிரகாம் மழலை மேதையாக திகழ்கிறார்.

தற்போது 15 வயதான தனிஷ்க், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் படித்து உயிரி மருத்துவ பொறியியல் பட்டதாரி ஆகி உள்ளார். இது ஒரு சாதனை ஆகும்.

இது குறித்து அவர் கூறும்போது, நிச்சயமாக நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்து உள்ளேன். இது மிகுந்த உற்சாகம் அளித்து இருக்கிறது. இது எனக்கு பெருமிதம் அளித்து இருக்கிறது" என்று குறிப்பிட்டார். கேரள மாநிலம் திருவல் லாவை பூர்வீகமாகக் கொண்டு உள்ள பிஜூ ஆபிரகாம், தாஜி ஆபிரகாம் தம்பதியர் தங்கள் மகனின் சாதனையால் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். இது பற்றி அவர்கள் குறிப்பிடுகையில், "தனிஷ்க் மிகுந்த ஆர்வம் கொண்டவர். என்று கூறினார்.

தீக்காயம் அடைந்த நோயாளிகளின் உடலை தொடா மலேயே அவர்களின் இதயத்துடிப்பை அறிந்துகொள்ள உதவும் கருவியை தனிஷ்க் வடிவமைத்து உள்ளார்.

என்ஜினீயிரிங் பட்டதாரியாகி உள்ள இவர், இப்போது பி.எச்.டி. ஆராய்ச்சிப் படிப்பில் சேர்ந்து உள்ளார்.

இவரது தந்தை பிஜூ ஆபிரகாம், சாப்ட்வேர் என்ஜினீயர், தாயார் தாஜி ஆபிரகாம் கால்நடை மருத்துவர். ஆனால், மகனுக்காக தாய் வேலையை ராஜினாமா செய்து விட்டு மகனை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறார். இந்த தம்பதி யருக்கு, தியாரா தங்கம் ஆபிரகாம் என்ற மகளும் உள்ளார்.

## மழைக் காலங்களில் பின்பற்ற வேண்டியவை!

*1. மழைக்காலங்களில், கூடுமானவரை நைலான், பாலியஸ்டர் போன்ற எளிதில் உலரக்கூடிய உடைகளையே உடுத்தவும்.*

*2. மழைக்காலத்தில் ரப்பர் செருப்புகளை உபயோகிக்கவும், லெதர் ஷூ, செருப்பு தண்ணீரில் ஊறினால் பாழாகிவிடும்!*

*3. தண்ணீரில் ஊறிய ஷூவை காயவைக்க, பழைய செய்தித்தாள்களை அதனுள் அடைத்து வைக்கவும்!*

*4. புயல், மழை ஏற்படும் நாட்களில், மளிகைச்சாமான், பால்பவுடர், மெழுகுவர்த்தி, தீப்பெட்டி, வெங்காயம், கிழங்கு வகைகளை ஸ்டாக் வைத்தால் சமயத்திற்கு உதவும்!*

*5. மழை ஆரம்பிப்பதற்கு முன்பே, ஏற்கெனவே தயார் செய்து, ஸ்டாக் வைத்துள்ள வடகம், வற்றல், மளிகை சாமான்களை வெயிலில் காயவைத்து எடுத்தால் பூச்சி, பூசனம் தாக்காது!*

*6. மழையில் நனைந்து வீடு திரும்புவோர், தலை, உடம்பு துவட்டி, உடை மாற்றியதும் சூடான காபி (அ) தேநீர் பருகிய பின், கை, கால், தொண்டையில் சிறிது நீலகிரி தைலத்தைத் தேய்த்துக் கொண்டால் ஜலதோசம் பிடிக்காது!*

*7. இடி, மின்னலின்போது, பிரிஜ், தொலைக்காட்சிப் பெட்டியில் உள்ள கேபிள் ஒயரையும் கழற்றிவிடுவது நல்லது!*

*8. மழைக்காலங்களில் காய்கறி கிடைக்காதபோது வடாம், வற்றல் போன்றவற்றை சமையலுக்குப் பயன்படுத்தலாம்!*

*9. மழை மற்றும் குளிர் காலங்களில், பாதங்களை மூடும்படி சாக்ஸ் அணிந்து கொண்டால், குளிரும் ஜில்லிப்பும் தாக்காது, தூங்குவதற்கு முன் காலில் சாக்ஸ் அணிந்தால் குளிரிலிருந்து நம்மைக் காக்கும்!*

**– பீமபெருமாள்**



## முதுகெலும்பு தேய்மானம்

L 4, L 5 முதுகெலும்பு தேய்மானத்தை கட்டுக்குள் வைக்கும் அற்புத முருங்கைக் கஞ்சி வைத்தியம்!

இரண்டு மூன்று கட்டு முருங்கைக்கீரை இலைகளை நன்றாகக் கழுவி எடுத்து மிக்சியில் அரைத்து, இரண்டு லிட்டர் வரும்படி சாறாக்கிக் கொள்ளவும். இந்த இரண்டு லிட்டர் முருங்கைச் சாற்றில் ஒரு கிலோ பச்சரிசி, ஐம்பது கிராம் மிளகு, இருநூறு கிராம் பாசிப்பருப்பு, சிறிது, சுக்கு, ஏலக்காய் சேர்த்து வெயிலில் காய வைக்க வேண்டும்.

முருங்கைச் சாற்றில் அரிசி, இதரப் பொருட்கள் நன்றாக ஊற வேண்டும். இவை அனைத்தும் நன்றாக ஊறியபின்பு மறுபடியும் ஈரப்பதம் போகும்வரை வெயிலில் காயவைத்து, சிறு குருணையாக பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதனை ஒரு டப்பாவில் பத்திரப்படுத்தி, தினந்தோறும் தண்ணீரைக் கொதிக்க வைத்து, அதில் முருங்கை அரிசி குருணையை, கஞ்சியாகச் செய்து சிறிது கல் உப்பு சேர்த்துக் குடிக்கவும்.

இந்தக் கஞ்சியை காலை இரவு என்று இரண்டு வேளை யும் சாப்பிடலாம். அல்லது காலையில் மட்டும் குடிக்கலாம்! இந்தக் கஞ்சி முதுகெலும்பை வலுப்படுத்துகிறது.

L 4, L 5 இன்று நிறைய நபர்களுக்குத் தேய்ந்து போய் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பெண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து குழந்தை பிறந்தது என்றால் L 4, L 5 தேய்ந்து போகிறது. இருசக்கர வாகனங்கள் அதிகம் பயன் படுத்துவோர்க்கு L 4, L 5 தேய்ந்து போகிறது. அந்த L 4, L 5 தேய்ந்து போய்விட்டது என்றால், உட்கார முடியாத நிலை, முதுகு வலி, இடுப்பு வலி உண்டாகும்.

அந்த மாதிரி L 4, L 5 தேய்ந்து போவது, L 4, L 5 என்று சொல்லக்கூடிய முதுகெலும்பில் இருக்கக்கூடிய "Disc prolapse'' ஆவது. இவை அனைத்துக்குமே முழுமையான மருந்து இந்த முருங்கைக்கீரை கஞ்சிதான். அதிக இரும்புச் சத்து மற்றும் கால்சியம் சத்து கொண்டுள்ள இந்த முருங்கைக் கீரைக் கஞ்சியை நாற்பத்தெட்டு நாட்கள் தொடர்ந்து சாப்பிட் டுக் கொண்டே வரவேண்டும். இவ்வாறு சாப்பிட்டு வந்தால் உங்களுடைய முதுகு எலும்பு வலுவாகும். இடுப்பு வலி, முதுகு வலி குணமாகிவிடும்.

– நாராயணன்

## தமிழிசையில் ஏழுசுரங்கள்

*அவை : குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகியனவாம்.*

*அறுசுவை காய்கனிகளும் அவற்றின் பயன்பாடு களும்.*

*அறுசுவை என்பவை : இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, கசப்பு, கார்ப்பு, துவர்ப்பு ஆகியனவாகும்.*

*1. துவர்ப்புச்சுவை காய்கறிகள்:*

*வாழைக்காய், அவரை, அத்திக்காய், மாவடு, மாதுளை, மஞ்சள்.*

***பயன்பாடுகள்:*** *துவர்ப்புச்சுவை ரத்த ஓட்டத்தைச் சீராக வைத்திருக்கும்*

*2. புளிப்புச்சுவை காய்கறிகள்:*

*எலுமிச்சை, புளிச்சக்கீரை, தக்காளி, நார்த்தங்காய், நெல்லி (இட்லி, தோசை, தயிர், மோர்)*

***பயன்பாடுகள்:*** *பொதுவாக உடல் உழைப்பு உள்ளவர்கள் அதிகம் பயன்படுத்தலாம். மற்றவர்கள் இவற்றைக் குறைவாக உண்பது நல்லது.*

*3. கார்ப்புச்சுவை காய்கறிகள்:*

*வெங்காயம், மிளகாய், இஞ்சி, பூண்டு, மிளகு, கடுகு,*

***பயன்பாடுகள்:*** *இரத்தச் சுத்திகரிப்பு செய்கின்றது.*

*அமிலத்தன்மை உணவுகளை நீக்கிவிட்டு காரத் தன்மை உணவுகளைக் குறைந்த அளவு சேர்த்தால் நோய்கள் விரைவில் அகலும்.*

*4. கசப்புச்சுவை காய்கறிகள்:*

*பாகற்காய், சுண்டக்காய், கத்தரிக்காய், வேப்பம்பூ, முருங்கைக்கீரை, வெந்தயம், எள், சீரகம், பெருங்காயம்.*

***பயன்பாடுகள்:*** *உடம்பிலுள்ள உதவாத கிருமி களை அழித்து உடம்பிற்கு சக்தி கூட்டும். சளியைக் கட்டுப் படுத்தும் தன்மை கொண்டது. நரம்பிற்கு பலத்தைக் கொடுக்கிறது. உடலில் இயற்கையாக நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கச் செய்யும்.*

*5. உவர்ப்புச்சுவை காய்கறிகள்:*

*கீரைத்தண்டு, வாழைத்தண்டு, முள்ளங்கி, பூசணிக் காய், சுரைக்காய், பீர்க்கங்காய், புடலங்காய், நெல்லிக் காய், மணத்தக்காளி, கொத்தமல்லி ஆகியவை.*

***பயன்பாடுகள்:*** *நினைவாற்றலை அதிகரிக்கச் செய்யும். மேலும் மற்ற சுவைகளைச் சமன் செய்ய உதவு கின்றது. உணவு செரிமானத்திலும் பங்கு வகிக்கின்றது.*

*6. இனிப்பு பற்றி எல்லோரும் அறிந்த ஒன்றே.*

*தொகுத்தவர் :* ***பீமபெருமாள்***


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**





நடிகர் சவால்ராம் நடிக்கும் கல்யாணப்பரிசு – சின்னத்திரைத் தொடர் – சன் தொலைக்காட்சியில்...



அன்னை தெரசா அறக்கட்டளை சார்பில் முதியோர் நாளை முன்னிட்டு முதியோர்களுக்கு சேலை, வேட்டிகள் வழங்கப்பட்டது. அறக்கட்டளையின் தலைவர் திரு. தேவகுமார், செயலாளர் திரு. ஜி. என். மேத்யூ ஆகியோர் நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

